# 9. வர்த்தகம், சென்மதி நிலுவைகள், சுற்றுலா

## 9.1 பொதுவான போக்குகள்

1996 இல் வெளிநாட்டுத்துறை இடரான சந்தர்ப்பங்களின் கீழ் ஒரு குறிப்பிடத்தக்க உறுதிப் பாட்டை எடுத்துக்காட்டியது. ஏற்றுமதிகள் 13 சதவீதத்தாலும் ,இறக்குமதிகள் 7 சதவீதத்தாலும் அதிகரித்தன. இதனால் வர்த்தகப் பற்றாக்குறை 1995 இன் ரூ. 774,350 இலட்சம் அல்லது சிஎஉ 9,970 இலட்சத்திலிருந்து (மொ.உ.உ. இன் 11.6 சதவீதம்) 1996 இல் ரூ. 727,310 இலட்சம் அல்லது சிஎஉ 9,090 இலட்சத்திற்கு (மொ.உ.உ.இன் 9.5 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. 1993 இலிருந்து ஓர் மிகையைக் காட்டிவந்த பணிகள் கணக்கு 1996 இல் சுற்றுலாவிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட ஓர் வீழ்ச்சி காரணமாக ரூ. 54,270 இலட்சம் (சி.எ.உ 680 இலட்சம்) கொண்ட பற்றாக்குறையை விளைவித்தது. தனியார் மாற்றல்கள் 10 சதவீதத்தால் அதிக

அட்டவணை **9.1**

சென்மதி நிலுவை பகுப்பாய்வு வெளிப்படுத்துகை

| விடயம் | சிஎஉ பத்து இலட்சம் | | | | | ரூபா பத்து இலட்சம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1992 | 1993 | 1994 | 1995 | 1996(அ) | 1992 | 1993 | 1994 | 1995 | 1996(அ) |
| 1. வணிகப் பொருட்கள் | -740 | -825 | -1,089 | -997 | -909 | -45,784 | -55,486 | -77,190 | -77,435 | -72,731 |
| ஏற்றுமதிகள் | 1,745 | 2,046 | 2,235 | 2,504 | 2,822 | 107,855 | 138,174 | 158,554 | 195,092 | 226,801 |
| இறக்குமதிகள் | 2,485 | 2,872 | 3,324 | 3,501 | 3,731 | 153,640 | 193,660 | 235,744 | 272,527 | 299,532 |
| 2. பணிகள் | -23 | 28 | 8 | 10 | -68 | -1,430 | 1,8 21 | 520 | 763 | -5,427 |
| பெறுகைகள் | 489 | 535 | 627 | 688 | 648 | 30,256 | 36,050 | 44,363 | 53,487 | 52,053 |
| கொடுப்பனவுகள் | 513 | 507 | 619 | 678 | 716 | 31,686 | 34,229 | 43,843 | 52,723 | 57,480 |
| 3. பொருட்களும் பணிகளும் (1+2) | -763 | -797 | -1,081 | -987 | -976 | -47,214 | -53,665 | -76,671 | -76,672 | -78,158 |
| 4. தனியார் மாற்றல்கள் (தேறிய) | 328 | 402 | 438 | 448 | 492 | 20,253 | 27,090 | 30,989 | 34,820 | 39,485 |
| பெறுகைகள் | 389 | 454 | 499 | 526 | 579 | 24,037 | 30,592 | 35,345 | 40,891 | 46,467 |
| கொடுப்பனவுகள் | 61 | 52 | 61 | 78 | 87 | 3,784 | 3,501 | 4,357 | 6,072 | 6,982 |
| 5. அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய) | 130 | 115 | 117 | 114 | 106 | 8,027 | 7,749 | 8,257 | 8,896 | 8,515 |
| 6. நடைமுறைக்கணக்கு நிலுவை (3+4) | -306 | -280 | -526 | -425 | -378 | -18,935 | -18,825 | -37,425 | -32,956 | -30,157 |
| 7. நாணயமல்லா மூலதனம் (தேறிய) | 3 81 | 612 | 700 | 399 | 271 | 23,450 | 41,066 | 49,912 | 30,338 | 21,671 |
| நீண்டகாலம்: | 293 | 458 | 499 | 383 | 241 | 17,971 | 30,684 | 35,648 | 28,997 | 19,282 |
| நேரடி முதலீடு | 86 | 134 | 110 | 35 | 83 | 5,315 | 9,107 | 7,815 | 2,931 | 6,606 |
| வெளிநாட்டு நேரடி முதலீடு | 86 | 134 | 110 | 10 | 60 | 5,315 | 9,107 | 7,815 | 1,011 | 4,756 |
| தனியார்மயமாக்கல் பெறுகை | 0 | 0 | 0 | 25 | 23 | 0 | 0 | 0 | 1,920 | 1,850 |
| தனியார் நீண்ட காலம் (தேறிய) | 18 | 135 | 216 | 49 | 2 | 1,162 | 8,998 | 15,628 | 2,856 | 202 |
| உட்பாய்ச்சல் (ஆ) | 113 | 217 | 281 | 146 | 124 | 7,081 | 14,586 | 20,203 | 10,305 | 10,000 |
| வெளிப்பாய்ச்சல் | 95 | 83 | 65 | 97 | 122 | 5,920 | 5,588 | 4,574 | 7,449 | 9,798 |
| அரசு நீண்டகாலம் (தேறிய) | 189 | 190 | 172 | 299 | 156 | 11,494 | 12,579 | 12,204 | 23,210 | 12,474 |
| உட்பாய்ச்சல் | 313 | 334 | 311 | 44i | 321 | 19,193 | 22,317 | 22,026 | 34,296 | 25,717 |
| வெளிப்பாய்ச்சல் | 124 | 144 | 139 | 143 | 165 | 7,699 | 9,738 | 9,822 | 11,086 | 13,243 |
| குறுகிய காலம்: | 87 | 153 | 201 | 16 | 30 | 5,479 | 10,382 | 14,265 | 1,340 | 2,388 |
| பட்டியலிடப்பட்ட முதலீடு | 18 | 48 | 20 | -2 | 4 | 1,122 | 3,272 | 1,334 | -90 | 353 |
| தனியார் குறுகியகாலம் (தேறிய) | 91 | 105 | 182 | 18 | 26 | 5,652 | 7,110 | 12,930 | 1,430 | 2,035 |
| அரச குறுகியகாலம் (தேறிய) | -22 | 0 | 0 | 0 | 0 | -1,295 | 0 | 0 | 0 | 0 |
| 8. சிஎஉ ஒதுக்கீடுகள் | | | | | | | | | | |
| 9. பெறுமதி சீராக்கங்கள் | | | | | | 1,555 | -1420 | -1380 | 6,394 | 4,213 |
| 10. பிழைகளும் தவிர்ப்புக்களும் | 58 | 44 | - 1 | -37 | 44 | 3,399 | 3,328 | 6,059 | -2339 | 126 |
| 11.மொத்த நிலுவை | 1 33 | 375 | 173 | -62 | -63 | 9,469 | 24,149 | 17,166 | 1,437 | -4,148 |
| 12. நாணய அசைவுகள் (இ) | -133 | -375 | -173 | 62 | 63 | -9,469 | -24,149 | -17,166 | -1,437 | 4,148 |
| செலாவணி வீதம் ரூ/சிஎஉ | | | | | | 61.75 | 67.39 | 70.75 | 77.74 | 80.23 |
| மொ.உ.உ. இன்விகிதமாக சதவீதங்களில் | | | | | | | | | | |
| வர்த்தகக் கணக்கு | | | | | | -10.8 | -11.1 | -13.3 | -11.6 | -9.5 |
| நடைமுறைக் கணக்கு | | | | | | -4.5 | -3.8 | -6.5 | -4.9 | -3.9 |
| நடைமுறைக் கணக்கு கொடைகள் நீங்கலாக | | | | | | -6.4 | -5.3 | -7.9 | -6.3 | -5.0 |

(அ) தற்காலிமானவை.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(ஆ) முன்னைய ஆண்டுகளில் முற்பணம் செலுத்தப்பட்டிருந்த நான்கு வானூர்திகளின் பேரிலான மூலதன உட்பாய்ச்சலுக்கு 1993 இலும் 1994 இலும் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்களையும் உள்ளடக்கும்.

(இ) நாணயத்துறையிலுள்ள எல்லாக் கொடுக்கள் வாங்கல்களும் ஆண்டிறுதியின் செலாவணி வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன.

ரித்தன. இதனால், 1996 இல் வர்த்தகம், பணிகள் மற்றும் மாற்றல்கள் சேர்ந்த சென்மதி நிலுவைகளின் நடைமுறைக் கணக்கு ரூ.301,570 இலட்சம் அல்லது சிஎஉ 3,780 இலட்சம் (மொ.உ.உ.இன் 3.9 சதவீதம்) கொண்ட ஓர் ஒடுங்கிய பற்றாக்குறையை எடுத்துக் காட்டியது. கடந்த வருடத்தில் இந்தப் பற்றாக்குறை 329,560 இலட்சமாக அல்லது சிஎஉ 4,250 இலட்சம் ஆக (மொ.உ.உ 4.9 சதவீதமாக) தனியார் மயப்படுத்தல் மூலமான பெறுகைகள் உட்பட்ட நேரடி முதலீடான படுகடன் அல்லாதவற்றை உருவாக்கம் மூலதன உட்பாய்ச்சல்கள், முன்னைய ஆண்டின் பின்னடைவுக்குப் பின்னர் 1996 இல் ரூ. 66,060 இலட்சம் (சிஎஉ 830 இலட்சம்) கொண்ட குறிப்பிடத்தக்க ஓர் முன்னேற்றத்தைக் காட்டியது. எனினும் தேறிய அலுவல்சார் மூலதன உட்பாய்ச்சல்கள் ஓர் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் காட்டின. பொதுவாக அலுவல்சார் மூலதன உட்பாய்ச்சலில் ஏற்பட்ட குறைவு காரணமாக சென்மதி நிலுவைகள் ரூ.41,480 இலட்சம்(சிஎஉ 630 இலட்சம்) கொண்ட பற்றாக்குறையைக் கொண்டிருந்தன.

மத்தியகிழக்குப் பிராந்தியத்திற்குப்பின் உலகின் இரண்டாவது பெரிய, தேயிலை நுகர்வாளரான சுதந்திர அரசுகளின் பொதுநலவாய நாடுகளிலிருந்தான உறுதியான உயர்ந்த கேள்வியால் எழுந்த அதிகரித்த விலைகளால் தேயிலைத்துறை நன்மையடைந்தது. 1996 இல் உலக தேயிலை உற்பத்தி 4 சதவீதமளவால் அதிகரித்தவேளையில் சுதந்திர அரசுகளின் பொதுநலவாய நாடுகளிலிருந்தான கேள்வி கணிசமாக வளர்ச்சியடைந்தது. கோதுமைத் தானியம், அரிசி, மசகெண்ணெய் என்பனவற்றின் இறக்குமதி விலையில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு மத்தியிலும் வர்த்தகமாற்று விகிதம் தேயிலை, தெங்கு, உற்பத்திகள், ஆடைகள் என்பனவற்றின் அதிகரித்த விலைகள் காரணமாக 2 சதவீதத்தால் முன்னேற்றம் கண்டது. கைத்தொழில் ஏற்றுமதிகள் துறையில் 1996 இல் நிலவிய தற்காலிக வழங்கல் தடைகளால் இலங்கை மேற்குலகின் கைத்தொழில் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியின் மீட்சியிலிருந்து முழுமையளவில் நன்மைபெற முடியாதிருந்தது. இறக்குமதிகள் பக்கத்தில், உள்நாட்டு வழங்கலிலான பற்றாக்குறையால் ஏற்பட்ட இடை வெளியை நிரப்புவதற்காக மேலதிக உணவு இறக்குமதிகள்

**வரைபடம் 9.1**
**சென்மதி நிலுவை**




முக்கியமாக அரிசி தேவையாயிருந்தன. அரிசி தவிர்ந்த ஏனைய உணவுப் பயிர்களைப் பொறுத்தமட்டில் உள்நாட்டு வழங்கல் நிலைமை ஆண்டின் இறுதியளவில் முன்னேறியது. பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சியைப் பிரதிபலிக்கும் வகையில், இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் அதிகரித்தன. 1995 இறுதியில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சேகரிப்பு நிலையங்களின் மீதான பயங்கரவாதிகளின் தாக்குதலால் அழிக்கப்பட்ட தாங்கிருப்புக்களை நிரப்புவதற்காகவும், வெப்ப மின்வலுவை உருவாக்குவதற்குமாக மேலதிக பெற்றோலிய இறக்குமதிகள் தேவையாயிருந்தன. 1996 இல் மின் உருவாக்கிகளின் இறக்குமதிகள் மீதான மொத்தச் செலவு சிஎஉ 430 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1995 இல் எயர்லங்காவின் மீள் தொகுதியிடல் செயற்றிட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட இறுதி வானூர்தியின் பெறுமதி மற்றும் 1996 இல் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுருவாக்கிகளுக்கு சீராக்கஞ் செய்யப்பட்ட முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 1996 இல் 10 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன.

தனியார் மயப்படுத்தும் செயற்றிட்டம், அதன் ஆரம்ப எதிர்பார்ப்புக்களைவிட குறைந்து விளங்கிய போதும், 1996 இல் தனியார் மயப்படுத்தல் மூலமான பெறுகைகள் முன்னைய ஆண்டின் ஒத்த பெறுமதியைப் போன்று சிஎஉ 230 இலட்சம் கொண்ட ஓர் உட்பாய்ச்சலைக் கொண்டிருந்தது. எயர்லங்காவிற்கான அதன் மீள் தொகுதியிடல் செயற்றிட்டத்திற்கு புதிய கடன்பாடுகளுக்குச் செல்லாது, எயர்லங்கா

வினால் எடுக்கப்பட்ட கடந்த கடன்களுக்கான அதிகரித்த மீள் கொடுப்பனவுகளாலும், முதலீட்டுச் சபையால் மேற்கொள்ளப்பட்ட கடல் கடந்த கடன்பாடுகளிலிருந்தான குறைந்த தேறிய உட்பாய்ச்சல்களாலும் தேறிய தனியார் நீண்டகால கடன் மூலதனம் சிஎஉ 490 இலட்சத்திலிருந்து சிஎஉ 20 இலட்சத்திற்கு குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது. தேறிய அலுவல்சார் மூல தன உட்பாய்ச்சல்களும் முக்கியமாக 1996 இல் கூடிய புதிய கடன்பாடுகளுக்குச் செல்லாது வெளிநின்ற பாதுகாப்பு சம்பந்தமான இறக்குமதிக் கொடுகடனின் மீள் செலுத்தலால் குறைந்து காணப்பட்டது.

பொதுவாக முதலீட்டு சூழலை முன்னேற்று வதற்கான பல முன்னேற்றகரமான நடவடிக்கை கள் எடுக்கப்பட்டதுடன், இவை வெளிநாட்டு தனியார் மூலதன உட்பாய்ச்சலுக்கான ஒரு பெரும் தூண்டுதலான சூழலையும் ஏற்படுத்தும். இதைப் பொறுத்தமட்டில், பற்றாக்குறையை நிதியிடலில் தனியார் மயப்படுத்தலிலிருந்தான பெறுகையான ரூ. 50,000 இலட்சம் கொண்ட இலக்கின் குறைந்த எதிர்பார்ப்புடன் 1997 இல் மொ.உ.உ.இன் 7.3 சதவீதத்திற்கு வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையைக் கட்டுப்படுத்துவதற்கான தேவையை விதந்துரைத்தல், 1997 இற்கான நிதிக் கட்டமைப்பின் கீழ் நோக்கிய நிச்சயமற்ற தன்மையை குறைத்துவிட்டது. இதனுடன், ஏற்றமதியை இலக்காகக் கொண்ட கூட்டு நிலையங்களுக்கு அதிகரித்த நிதி ஊக்குவிப் புக்களும், அனைத்து முதலீட்டுச்சபை அல்லாத ஏற்றுமதியாளர்களுக்கு வெளிநாட்டு நாணயக் கடன்பாட்டு வசதிகளும் வழங்கப்படும். 1997 வரவு செலவுத்திட்டத்தில் தனியார்துறைக்கு வழங்கப்பட்ட புதிய ஊக்குவிப்புக்கள் தனியார் துறை நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்ப உதவியது. எனினும் தகுதியற்ற திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் தாமதங்கள் காரணமாக சில வேலையாளர்கள் அமைதியின்மை தனியார் மயப்படுத்தும் செயற்றிட்டத்தின் வேகத்தையும், இம் மூலத்திலிருந்தான வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல்களையும் குறைத்தன. இதே வேளை, மூலதன உட்பாய்ச்சலின் கீழ் தற்போது ஒவ்வொன்றாக பரிசீலிக்கப்பட்டு அனுமதிக்கப் படுவதுடன் இவ்வாண்டில் குறிப்பிடத் தக்க முதலீடுகள் வெளிநாடுகளில் மேற்கொள் ளப்பட்டன. இது நேபாளம் மற்றும் வங்காள தேசத்தில் இரு வர்த்தக வங்கிகள் திறக்கப்பட் டமையையும், மாலைதீவில் உல்லாச விடுதிகள் வாங்கியமையும் உள்ளடக்கியதுடன், இதன் மூலம் மூலதனக் கணக்கு கொடுக்கல் வாங்கல்களின் தாராளமயமாக்கலை மேலும் முக்கியமாக்கியது.

மத்திய வங்கி 1995 இல் அறிமுகப்படுத் தப்பட்ட இடையீட்டு நாணயமான ஐ.அ.டொலருக் கான தினசரி வாங்கும் மற்றும் விற்கும் வீதங்களை இவ்விரு வீதங்களுக்குமிடையே 2 சதவீத இடை வெளியுடன் தொடர்ந்தும் அறிவித்துவந்தது. இதன்படி, வர்த்தக வங்கிகள் பரந்த இடை வெளியினுள் அதன் சொந்த வாங்கும் மற்றும் விற்கும் வீதங்களைக் குறிப்பதற்கான சுதந்தி ரத்தைக் கொண்டிருந்தன. ரூ./ ஐ.அ.டொலர் வீதம் முக்கியமாக சந்தைப் போக்கைப் பிரதிபலித்ததுடன் இதில் வர்த்தக வங்கிகள் வங்கிகளுக்கிடையேயான சந்தையில் கொள்வனவு செய்வதன் மூலம் அவற்றின் தேறிய வெளிநாட்டு செலாவணி நிலுவைகளைப் பேணுவதற்கு முயற்சிப்பதை விட அவற்றின் தேறிய வெளி நாட்டுச் சொத்துக்களில் ஓரளவு குறைவை அனுமதிப்பதன் மூலம் செலாவணிச் சந்தைத் தாக்கத்தின் ஒரு பகுதியை ஈர்ப்பதற்கு முன்னு ரிமையளிக்கிறது. மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்கு நிலைமையும் நன்நிலையில் தொடர்ந்து விளங்கியதுடன் வங்கி ஒதுக்குகளைப் பாது காப்பதற்கு சந்தையில் ஆர்வத்துடன் தலையிட வேண்டியதில்லை. வர்த்தக வங்கிகளைப் போன்றே மத்திய வங்கி மீதான இவ்வணுகுமுறை செலாவணி வீதத்தை 1996 இல் நிலவிய கூடிய பணவீக்க நிலைமையில் பணவீக்கத்திற்கெதிராக ஓர் வினைத்திறன் மிக்க பெயரளவு ஆதாரமாக மாற்றியது. இங்கு பணவீக்கத்தின் ஒரு குறிப்பிடத்தக்க பங்கு பேரண்டப் பொருளாதார சமமின்மைகளின் விளைவால் ஏற்படாததுடன், இது தற்காலிக வழங்கல் தடை தொடர்பாக ஓர் மாற்றல் நிகழும் தோற்றப்பாடாகும்.

1996 இல் நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக் கள் சிஎஉ 280 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தன. திசெம்பர் இறுதியில் சிஎஉ 17,010 இலட்சமாக விளங்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களின் மட்டம் 1997 இற்கான திட்டமிடப்பட்ட இறக்குமதிக ளின் 5 மாதங்களுக்கு நிதியிடப் போதுமானது. பொருட்கள் பணிகள் மற்றும் தனியார் மாற்றல்களின் ஒரு விகிதமாக படுகடன் பணிக்

வரைபடம் 9.2
வெளிநாட்டு வர்த்தகம்




**அட்டவணை 9.2**
வெளிநாட்டு வர்த்தகத்தின் செயலாற்றம்

| ஆண்டு | வளர்ச்சி வீதம் | | வர்த்தகச்சுட்டெண் (1990 =100) | | விகிதம் | |
|---|---|---|---|---|---|---|
| | ஏற்றுமதிகள் | இறக்குமதிகள் | ஏற்றுமதிகள் | இறக்குமதிகள் | வர்த்தக மாற்றுவிகிதம் (அ) | ஏற்றுமதிகள்/ இறக்குமதிகள் |
| 1992 | 20.3 | 11.2 | 131.8 | 108.8 | 121.1 | 0.70 |
| 1993 | 17.1 | 15.4 | 144.7 | 114.6 | 126.3 | 0.71 |
| 1994(அ) | 9.2 | 15.7 | 151.2 | 121.0 | 125.0 | 0.67 |
| 1995(ஆ) | 12.0 | 5.3 | 174.2 | 140.2 | 124.3 | 0.72 |
| 1996(இ) | 12.7 | 6.7 | 194.9 | 153.2 | 127.2 | 0.76 |

*மூலங்கள்: இலங்கைச் சுங்கம்*
*இலங்கை மத்திய வங்கி*

*(அ) (ஏற்றுமதிவிலைச்சுட்டெண்/ இறக்குமதி விலைச்சுட்டெண்) 100*
*(ஆ) சீராக்கப்பட்டது*
*(இ) தற்காலிகமானவை*

கொடுப்பனவுகள் 1995 இன் 11.9 சதவீதத்திலிருந்து 1996 இல் 13.0 சதவீதத்துக்கு அதிகரித்தது. இதே வேளை, 1997 இல் பூர்த்தியாகவிருக்கும் அதிகரித்த அமைப்புச் சீராக்க வசதியின் கீழ் இரண்டாவது ஒழுங்கிற்கான அடிப்படையை அமைப்பதற்காக அமைப்பு ரீதியான சீர்திருத்தங்களுக்கான விடயங்களில் உடன்படுவதற்காக இவ்வாண்டு பன்னாட்டு நாணய நிதியத்துடனும் உலக வங்கியுடனும் ஆரம்ப பேச்சவார்த்தைகள் நடாத்தப்பட்டன.

## 9.2 ஏற்றுமதிகள்

1996 இல் ஏற்றுமதி வருவாய்கள் சிஎஉ 28,220 இலட்சமாக விளங்கி 1995 இன் வளர்ச்சியான 12 சதவீதத்தை விஞ்சி 13 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்ததுடன் நீடித்த வரட்சி மற்றும் வலுப் பற்றாக்குறையால் ஏற்பட்ட வேளாண்மை மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகள் பின்னடைவால் பாதிக்கபட்ட போதும்

அட்டவணை 9.3
ஏற்றுமதிகளின் அமைப்பு

| வகை | சிஎஉ.ப.இலட்சம் | | | | | ரூபா. ப. இலட்சம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 (அ) | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 (அ) |
| 1. வேளாண்மை ஏற்றுமதிகள் | 429 | 469 | 490 | 546 | 662 | 26,504 | 31,618 | 34,692 | 42,478 | 53,206 |
| தேயிலை | 241 | 295 | 296 | 317 | 424 | 14,893 | 19,911 | 20,964 | 24,638 | 34,067 |
| இறப்பர் | 48 | 46 | 51 | 74 | 72 | 2,960 | 3,086 | 3,582 | 5,713 | 5,753 |
| தெங்கு | 60 | 41 | 53 | 68 | 76 | 3,691 | 2,796 | 3,761 | 5,270 | 6,091 |
| உள்ளீட்டு உற்பத்திகள் | 43 | 27 | 35 | 45 | 56 | 2,665 | 1,847 | 2,476 | 3,520 | 4,469 |
| ஏனையவை | 17 | 14 | 18 | 23 | 20 | 1.026 | 949 | 1.285 | 1.750 | 1.622 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 80 | 87 | 90 | 88 | 91 | 4,959 | 5,825 | 6,385 | 6,857 | 7,295 |
| 2. கைத்தொழில் | | | | | | | | | | |
| ஏற்றுமதிகள் (ஆ)(இ) | 1,251 | 1,502 | 1,672 | 1,885 | 2,072 | 77,281 | 101,437 | 118,544 | 147,069 | 166,543 |
| புடவைகளும் ஆடைகளும் | 862 | 1,009 | 1,081 | 1,219 | 1,311 | 53,209 | 68,150 | 76,685 | 94,946 | 105,341 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 45 | 57 | 56 | 56 | 72 | 2,771 | 3,801 | 3,959 | 4,349 | 5,740 |
| ஏனையவை | 345 | 437 | 535 | 611 | 690 | 21,301 | 29,486 | 37,900 | 47,774 | 55,463 |
| 3. கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 45 | 54 | 60 | 57 | 66 | 2,749 | 3,653 | 4,292 | 4,447 | 5,292 |
| இரத்தினக் கற்கள் | 40 | 50 | 55 | 51 | 59 | 2,482 | 3,402 | 3,917 | 3,972 | 4,771 |
| ஏனையவை | 4 | 4 | 5 | 6 | 6 | 267 | 251 | 375 | 475 | 521 |
| 4. வகைப்படுத்தப்படாதவை(இ)(ஈ) | 22 | 21 | 13 | 16 | 22 | 1,321 | 1,467 | 1,026 | 1,098 | 1,760 |
| மொத்த ஏற்றுமதிகள் (ஆ)(ஈ) | 1,747 | 2,046 | 2,235 | 2,504 | 2,822 | 107,855 | 138,175 | 158,554 | 195,092 | 226,801 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) சீராக்கப்பட்டது.
(இ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஈ) மீள் ஏற்றுமதிகள் உட்பட.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
இலங்கை மத்திய வங்கி

ஏற்றுமதிகளில் எல்லா முக்கிய வகைகளிலும் அதிகரிப்புக்களை பிரதிபலித்தன. மொத்த ஏற்றுமதிகளில் 73 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்த கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 10 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்ததுடன் விலை, அளவு ஆகிய இரண்டிலும் பிரதிபலித்தன. அதேவேளை ஏற்றுமதிகள் மொத்த ஏற்றுமதிகளில் 23 சதவீதத்திற்கு வகைகூறியது. பிரதானமாக் தேயிலைக்கும் தெங்கிற்கும் அதிகவிலை கிடைத்ததால்இது 21 சதவீத அதிகரிப்பை காட்டியது.

## பெருந்தோட்டப் பயிர்கள்

1996 இல் பெருந்தோட்டப் பயிர்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் சிஎஉ 5,710 இலட்சத்திற்கு 25 சதவீதத்தால் அதிகரித்ததுடன் மொத்த ஏற்றுமதி வருவாய்களின் 20 சதவீதத்திற்கும் பங்களிப்புச் செய்தன. தேயிலை ஏற்றுமதியின் அளவு மேலும் 1.4 சதவீதத்தால் 2,440 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு அதிகரித்திருக்கையில், தேயிலை விலைகள் 32 சதவீதத்தால் அதிகரித்தன. சுதந்திர அரசுகளின் பொதுநலவாயம் மற்றும் அயல்நாடுகளுக்கான இறுதிச் சந்தைகளாக அபிவிருத்தியடைந்த ரசியா மற்றும் துருக்கியிலிருந்தான தொடரும் அதிகரித்த கேள்வியாலும், இலங்கைத்தேயிலையின் தரத்தில் ஏற்பட்ட ஓர் முன்னேற்றத்தாலும் 1996 இல் அதிகரித்த தேயிலை ஏற்றுமதிகளின் 19 சதவீதத்திற்கு ( 470 இலட்சம் கிலோகிறாம்கள்) வகை கூறி முக்கிய கொள்வனவாளராக விளங்குகையில் துருக்கி இரண்டாவது பெரிய கொள்வனவாளராக விளங்கி 13 சதவீதத்திற்கு (310 இலட்சம் கிலோகிறாம்கள்) வகை கூறியது. ஏனைய முக்கிய கொள்வனவாளராக சிரியா (9 சதவீதம்), ஜோடான் (6 சதவீதம்), ஈரான் (4 சதவீதம்), சவூதி அரேபியா (4 சதவீதம்) என்பன விளங்கின. ஐக்கிய இராச்சியத்திற்கான தேயிலை ஏற்றுமதிகள் 38 சதவீதத்தால் 80 இலட்சம் கிலோ கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்ததுடன், இது இலண்டன் ஏலங்களுக்கான குறைந்த கப்பலேற்றலில் பிரதிபலிக் கப்பட்டது.

இறப்பரிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் தாழ்வடைந்த விலைகள் காரணமாக (8 சதவீத வீழ்ச்சி) சிஎஉ 720 இலட்சத்திற்கு 3 சதவீத

**வரைபடம் 9.3**
**முக்கிய வகைகளின்படி ஏற்றுமதிகளின் பெறுமதிகள்**




வீழ்ச்சியைப் பதிவு செய்தன. இறப்பர் ஏற்றுமதிகளின் அளவு 6 சதவீதத்தால் அதிகரித்தன. 1996 இல் பன்னாட்டு இறப்பர் விலைகள், இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா ஆகிய நாடுகளில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளால் எழுந்த உற்பத்தி மிகைகள் மற்றும் உறுதியான இறப்பர் வழங்கலால் நலிவுற்றன. இத்துடன், 1995 இல் இயற்கை இறப்பர் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு ஜேர்மனி, பிரான்சு, ஐக்கிய இராச்சியம் என்பவற்றில் உந்து ஊர்தியின் உற்பத்தியின் மெதுவான வளர்ச்சி, இவ்வாண்டின் முற்பகுதியில் தொழிலாளர் பிரச்சினைகள் காரணமாக ஐக்கிய அமெரிக்காவின் முக்கிய ரயர் உற்பத்தியாளர்களிடமிருந்தான குறைந்த கேள்வி என்பன பங்களிப்புச் செய்தன.

**வரைபடம் 9.4**
**முக்கிய வகைகளின்படி கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதிகள்**




1996 இல் மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் 24 சதவீதத்தினால் சிஎஉ 560 இலட்சத்திற்கு அதிகரித்தன. ஏற்றுமதிகளின் அளவு உள்ளூர் வழங்கலின் தாழ்வடைந்த மட்டத்தைப் பிரதிபலிக்கும் வகையில் 18 சதவீதத்தல் வீழ்ச்சியடைந்தன. காய் ஒன்றிற்கு சமமான சராசரி க.ஏ.பெ. விலை 50 சதவீதத்தால்

அதிகரித்தது. பன்னாட்டு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் 1995 இறுதியில் உலகின் முக்கிய உற்பத்தியாளரும் தெங்கு உற்பத்திகளின் முக்கிய ஏற்றுமதியாளருமாகிய பிலிப்பைன்சில் ஏற்பட்ட ஓர் முக்கிய உற்பத்தி வீழ்ச்சியால் ஏற்பட்டதாகும். இதே வேளை பாதகமான வானிலை நிலைமைகளின் தாக்கத்தால் விளைவித்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி, உள்நாட்டில் பதனிடப்பட்ட உற்பத்திகளுக்குத் தேவையான காய்களின் அளவையும் குறைத்தது. ஏனைய தெங்கு உற்பத்திகளிலிருந்தான (தும்பு உற்பத்திகள், சிரட்டை உற்பத்திகள்) வருவாய்கள் 1996 இல் 10 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன.

## ஏனைய வேளாண்மை உற்பத்திகள்

1996 இல் ஏனைய வேளாண்மை உற்பத்திகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் 3 சதவீதத்தால் அதிகரித்தன. இவ்வகையின் கீழ் வரும் பொருட்கள் ஓர் கலந்த செயலாற்றத்தை எடுத்துக்காட்டியது. தயாரிக்கப்படாத புகையிலை மற்றும் கறுவாவின் ஏற்றுமதிகளின் விலைகள் மற்றும் அளவுகள் ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களால் முறையே 24 சதவீதத்தாலும் 8 சதவீதத்தாலும் அதிகரித்தன. இவ்விரு உற்பத்திகளும் ஏனைய வேளாண்மை உற்பத்திகளிலிருந்தான மொத்த வருவாய்களின் 58 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்தன. அதிகரித்த ஏற்றுமதி வருவாய்கள் சாதிக்காயும், சாதிப் பத்திரியும் (38 சதவீதம்), வெற்றிலைகள் (17 சதவீதம்), கராம்பு (25 சதவீதம்), பாக்கு (17 சதவீதம்), மிளகு (5 சதவீதம்) என்பனவற்றின் அதிகரித்த ஏற்றுமதிகளின் அளவு காரணமாக பதிவு செய்யப்பட்டன. ஏற்றுமதி வருவாய்களில் வீழ்ச்சிகளைப் பதிவு செய்த விடயங்களாக கோப்பி (58 சதவீதம்), அத்தியாவசிய எண்ணெய்கள் (33 சதவீதம்), முந்திரிப்பருப்பு (11 சதவீதம்) என்பன விளங்கி, இவை குறைந்த அளவு அதே போன்று குறைந்த விலையையும் பிரதிபலித்தன.

## கைத்தொழில் உற்பத்திகள்

ஏற்றுமதி அமைப்பு கடந்த இரண்டு தசாப்தங்களில் ஓர் முக்கிய மாற்றத்திற்கு உட்பட்டிருந்ததுடன், ஆடைகளால் வழிநடத்தப் பட்ட கைத்தொழில் ஏற்றுமதிகள் ஓர் முக்கிய பங்கை வகிக்கின்றது. கடந்த பத்து ஆண்டுகளில் கைத்தொழில் ஏற்றுமதிகள் ஆண்டிற்கு 16 சத வீதத்தால் அதிகரித்தன. 1996இல் கைத்தொழில் ஏற்றுமதிகளின் வளர்ச்சி குறைந்திருந்த போதிலும் 10 சதவீதம் கொண்ட வளர்ச்சி வீதம் இம்முழு ஆண்டிலும் அடையப்பட்டது. முக்கிய அதிகரிப்புக்கள் பெற்றோலிய உற்பத்திகளிலும் (28 சதவீதம்) ஏனைய பெற்றோலிய உற்பத்திகளிலும் (13 சதவீதம்) பதிவுசெய்யப்பட்டன. புடவை மற்றும் ஆடை ஏற்றுமதிகள் 1995இன் 13 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் 1996இல் 8 சதவீத வளர்ச்சியைக் காட்டின. புடவை மற்றும் ஆடைகளின் அளவு 5 சதவீதத்தால் அதிகரித்தது. புடவை மற்றும் ஆடை ஏற்றுமதிகளின் அளவுகளின் மெதுவான வளர்ச்சி குறிப்பாக 1996இன் நடுப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட குறைந்த ஏற்றுமதி அளவுகளின் பிரதிபலிப்பாலானதாகும். புடவை மற்றும் ஆடை ஏற்றுமதிகளின் அளவு தனியார் மின்வலு உருவாக்கிகளின் பாவனையை ஊக்குவிப்பதற்காக வழங்கப்பட்ட சலுகைகளாலும், செத்தெம்பரில் மின்வெட்டுக்கள் இடைநிறுத்தப்பட்டதாலும், 1996 ஒற்றோபரின்பின் ஓரளவு முன்னேற்றத்தை எடுத்துக்காட்டின. புடவை மற்றும் ஆடை ஏற்றுமதிகள் மொத்த கைத்தொழில் ஏற்றுமதிகளின் 63 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தன. இத்துறையினுள் இழைக்கப்பட்ட சீத்தைகள் அதிகூடிய வளர்ச்சியான 21 சதவீதத்தை எடுத்துக் காட்டின.

1996இல் பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் சிஉ 720 இலட்சத்திற்கு 28 சதவீதத்தால் அதிகரித்தன. ஏற்றுமதி அளவு 12 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் விலைகள் 15 சதவீதத்தால் அதிகரித்தன. இவ்வாண்டின் பிற்பகுதியில் பெற்றோலிய உற்பத்திகளின் விலைகள் அதிகரித்து, பன்னாட்டு எண்ணெய் விலைகளின் அதிகரிப்புக்களை பிரதிபலித்தது. 1996இல் பெற்றோலிய உற்பத்திகள் கைத்தொழில் ஏற்றுமதிகளின் 3 சதவீதத்திற்கு வகைகூறின.

1996 இல் ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் 13 சதவீதத்தால் அதிகரித்து மொத்த கைத்தொழில் ஏற்றமதிகளின் 33 சதவீதத்திற்கு வகைகூறின. தோல், இறப்பர், தாள், மரம் மற்றும் மட்பாண்ட துணை வகை 1996 இல் 10 சதவீதத்தால் சிஉ 2,850 இலட்சத்திற்கு வளர்ச்சியடைந்தது. இத்துணைத்துறையில்

இறப்பர் உற்பத்திகள் மற்றும் பயணப் பொருட்கள் மற்றும் பாதணி உட்பட தோற்பொருட்களிலிருந்தான வருவாய்கள் குறிப்பிடத்தக்க வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்திருக்கையில், மர அலங்காரப் பொருட்கள் மற்றும் அதையொத்த பொருட்களின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட ஓர் கணிசமான வீழ்ச்சி காரணமாக மர உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தன. ஏனைய வகைகளுள் அதிகரிப்புக்களைப் பதிவு செய்த விடயங்களாக பொறி, இயந்திர மற்றும் மின் கருவி (31 சதவீதம்), செயற்கை இறப்பர் (20 சதவீதம்), ஆபரணங்கள் (16 சதவீதம்) என்பன விளங்கின. 1996 சனவரி 1 இலிருந்து நடைமுறைக்கு வந்த, ஏற்றுமதிகளுக்கான ஆபரணங்களின் தயாரிப்புக்காக தீர்வையற்ற அடிப்படையில் விலையுயர்ந்த உலோகத்தின் வழங்கலால் ஆபரண ஏற்றுமதித் துணைத்துறை நன்மையடைந்தது. அண்மைக் காலத்தில், பொம்மைகள், ஆட்டம் மற்றும் விளையாட்டுப் பொருட்களின் ஏற்றுமதிகளுடன் ஓர் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எடுத்துக்காட்டின. 1996 இல் இவ்வகையிலிருந்தான வருவாய்கள் திணிக்கப்பட்ட பொம்மை ஏற்றுமதிகளின் உறுதியான வளர்ச்சியால் 1995 இன் சிஎஉ 310 இலட்சத்திற்கெதிராக சிஎஉ 460 இலட்சம் கொண்ட பெறு மதியைப் பதிவு செய்தன.

### கனிப்பொருள் உற்பத்திகள்

1996 இல் கனிப்பொருள் உற்பத்திகளின் ஏற்றுமதிகள் சிஎஉ 660 இலட்சத்திற்கு 15சதவீதத்தால் உயர்ந்து 1996 வரவு செலவுத் திட்டத்தால் வழங்கப்பட்ட இரத்தினக்கற்கள் வெட்டல் மற்றும் பதனிடலுக்கான தீர்வையற்ற பொறி மற்றும் கருவியை பெற்றதன் மூலம் நன்மையடைந்த முழு மதிப்புடைய மற்றும் அரை மதிப்புடைகற்களின் வருவாய்கள் அதேயளவான குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பிரதிபலித்தன. இத்துடன் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் (ஏஅச) இரத்தினக்கற்களின் நிறத்தை தரமிடும் முறை, நிறமுள்ள கோமேதகங்களை ஐக்கிய அமெரிக்க சந்தைக்கு அறிமுகப்படுத்தல், ஜப்பானிய சந்தைக்கு பெறுமதிக்கு தரப் படுத்தப்பட்ட கற்களை அனுப்பல் போன்ற ஊக்குவிப்புத் தொழிற்பாடுகளும் இவ்வபிவிருத்தியை நோக்கி பங்களிப்புச் செய்தன. இதன் விளைவாய், பதப்படுத்தப்பட்ட இரத்தினக் கல் ஏற்றுமதி அளவுகள் 20 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், பெறுமதி 1995 இன் சிஎஉ 510 இலட்சத்திலிருந்து 1996 இல் சிஎஉ 590 இலட்சத்திற்கு அதிகரித்தன. ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் சிஎஉ 60 இலட்சமாக விளங்கி, இயற்கைக் காரீயம், உலோகத் தாதுப்பொருள்கள், இரும்பு பைறைற்று என்பனவற்றின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் காரணமாக சிறிதளவால் அதிகரித்தன. எனினும், இல்மனைற்று மற்றும் ஏனைய கனிப்பொருள் உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன.

## 9.3 இறக்குமதிகள்

1995 இன் 5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இறக்குமதிகள் 7 சதவீத மிதமான வளர்ச்சியினைப் பதிவு செய்தன. அரிசி மற்றும் கோதுமை மீதான அதிகரித்த செலவினம் காரணமாக ஏனைய வகைகளையும் விட ஓரளவிற்கு துரிதமாக (9 சதவீத வளர்ச்சி) அதிகரித்துச் சென்ற நுகர்வுப்பொருட்களினால், இறக்குமதிகளின் அனைத்து முக்கிய வகைகளிலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் பிரதிபலிக்கப்பட்டன. இடைநிலைப்பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்கள் என்பனவற்றின் இறக்குமதிகள் முறையே 7 சதவீதத்தினாலும் 6 சதவீதத்தினாலும் அதிகரித்து, 1996இல் பதிவு செய்யப்பட்ட மிதமான பொருளாதார வளர்ச்சியினைப் பேணுவதற்கு உதவின.

### நுகர்வுப் பொருட்கள்

நுகர்வுப்பொருட்கள் வகையினுள் உணவு மற்றும் குடிபானம் என்பனவற்றின் இறக்குமதிகள் 16 சதவீதத்தால் அதிகரித்தன. ஏனைய நுகர்வுப் பொருட்களுக்கான கேள்வியானது, குறிப்பாக நீண்டகால நுகர்வுப் பொருட்களிலிருந்தான கேள்வி தாழ்வடைந்திருந்தமையினால் இறக்குமதிச் செலவு 2 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றது. 1995இன் சிஎஉ 20 இலட்சம் மட்டுமே கொண்ட இறக்குமதியுடன் ஒப்பிடுகையில் பெரும்போக அறுவடையில் ஏற்பட்ட தோல்வியானது 1977 இற்குப் பின்னரான அதிகூடிய 341,200 மெற்றிக் தொன் அரிசியை சிஎஉ 630 இலட்சம் செலவில் இறக்குமதி செய்யும் கட்டாயத்தை உருவாக்கியது. அரிசி இறக்குமதி மீதான தீர்வையானது நுகர்வோர்

அட்டவணை **9.4**
இறக்குமதிகளின் முடிவுப்பயன்பாட்டுப் பகுப்பு

| வகை | சிஎஉ ப. இலட்சம் | | | | | ரூபா.ப. இலட்சம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1992 | 1993 | 1994 | 1995 | 1996(அ) | 1992 | 1993 | 1994 | 1995 | 1996(அ) |
| 1. நுகர்வுப் பொருட்கள் | 595 | 639 | 730 | 778 | 851 | 36,746 | 42,981 | 51,810 | 60,508 | 68,372 |
| உணவும்குடிபானமும் | 372 | 383 | 419 | 475 | 553 | 22,944 | 25,675 | 29,739 | 36,901 | 44,377 |
| அரிசி | 46 | 35 | 9 | 2 | 63 | 2,852 | 2,386 | 655 | 122 | 5,118 |
| சீனி | 80 | 84 | 125 | 113 | 100 | 4,952 | 5,621 | 8,875 | 8,737 | 8,026 |
| கோதுமை | 74 | 83 | 82 | 131 | 141 | 4,549 | 5,609 | 5,825 | 10,155 | 11,267 |
| ஏனையவை | 172 | 180 | 203 | 230 | 249 | 10,591 | 12,059 | 14,384 | 17,887 | 19,966 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 224 | 256 | 311 | 303 | 298 | 13,802 | 17,306 | 22,071 | 23,607 | 23,995 |
| 2. இடைநிலைப் பொருட்கள் | 1,264 | 1,456 | 1,607 | 1,778 | 1,907 | 78,043 | 98,343 | 114,004 | 138,475 | 153, 117 |
| பெற்றோலியம் | 226 | 221 | 206 | 254 | 330 | 13,938 | 14,920 | 14,641 | 19,827 | 26,525 |
| வளமாக்கி | 38 | 46 | 44 | 57 | 52 | 2,366 | 3,108 | 3,097 | 4,406 | 4,189 |
| இரசாயனம் | 67 | 78 | 84 | 94 | 92 | 4,125 | 5,244 | 5,975 | 7,310 | 7,402 |
| புடவைகளும் ஆடைகளும் | 543 | 617 | 723 | 763 | 805 | 33,552 | 41,740 | 51,299 | 59,375 | 64,601 |
| ஏனையவை | 390 | 494 | 550 | 610 | 628 | 24,062 | 33,331 | 38,992 | 47,557 | 50,400 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் | 604 | 750 | 952 | 784 | 830 | 37,294 | 50,508 | 67,524 | 60,916 | 66,647 |
| பொறியும் கருவியும் | 277 | 332 | 390 | 331 | 448 | 17,098 | 22,377 | 27,635 | 25,769 | 35,987 |
| போக்குவரத்துக் கருவி (ஆ) | 128 | 224 | 316 | 201 | 123 | 7,889 | 15,012 | 22,425 | 15,564 | 9,885 |
| கட்டடப்பொருட்கள் | 129 | 138 | 168 | 179 | 181 | 7,936 | 9,342 | 11,898 | 13,956 | 14,540 |
| ஏனையவை | 71 | 56 | 79 | 73 | 78 | 4,371 | 3,777 | 5,566 | 5,627 | 6,235 |
| 4. பகுக்கப்படாத இறக்குமதிகள் | 24 | 26 | 32 | 156 | 142 | 1,472 | 1,718 | 2,238 | 12,301 | 11,288 |
| மொத்த இறக்குமதிகள் (இ) | 2,487 | 2,870 | 3,321 | 3,497 | 3,730 | 153,555 | 193,550 | 235,576 | 272,200 | 299,424 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) 1993, 1994, 1995 இல் இறக்குமதி செய்யப்பட்ட வானூர்திகளின் பெறுமதியையும் உள்ளடக்கும்
(இ) சீராக்கப்பட்டது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம்
இலங்கை வளமாக்கிக் கம்பனியும் ஏனைய வளமாக்கி முக்கிய இறக்குமதியாளர்களும்
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

நிவாரண நடவடிக்கையாக ஏப்பிறலில் நீக்கப்பட்டது. சீனி மற்றும் சமையலுக்கான எண்ணெய் என்பனவற்றின் இறக்குமதிகளுக்கு இறக்குமதிச் தீர்வைச் சலுகை அளிக்கப்பட்டது. 1996இன் முதல் இரு காலாண்டுப்பகுதிகளிலும் அரிசியின் பன்னாட்டுவிலை உறுதியாக நிலைத்திருந்ததுடன் இறுதி இரு காலாண்டுப் பகுதியில் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது. இது தாய்லாந்து, இந்தியா போன்ற முக்கிய உற்பத்தி நாடுகளிலிருந்தான பெருமளவு ஏற்றுமதி வழங்கல்கள் மற்றும் ஆண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் குறிப்பாக கோதுமை போன்ற பதிலீட்டுத் தானியங்களின் விலைகள் தாழ்வடைந்தமை என்பன காரணமாக ஏற்பட்டதாகும். 1995இனையும் விட ஓரளவால் மேம்பட்ட போதிலும் முக்கிய உற்பத்தி நாடுகளில் நிலவிய சாதகமான காலநிலையானது 1996 இல் கோதுமை உற்பத்தியினை வரலாற்று ரீதியான மட்டத்திற்கும் கீழாக வைத்திருந்ததுடன் குறிப்பாக 1996இன் முதல் மூன்று காலாண்டுகளில் கோதுமையின் பன்னாட்டு விலைகளை உயர்வாக வைத்திருந்தது. 1996இல் கோதுமை மாவின் நிர்ணயிக்கப்பட்ட விலைகள் அதிகரிக்கப்பட்டதன் காரணமாக உள்நாட்டுக் கேள்வியில் ஏற்பட்ட குறைப்பினைப் பிரதிபலிக்கும் கோதுமை இறக்குமதிகளின் தாழ்வடைந்த அளவானது (14 சதவீதம்) மொத்த இறக்கு மதிச் செலவினத்தின் மீது கோதுமையின் உயர் விலைகள் கொண்டிருக்கக்கூடிய பாதகமான தாக்கத்தை ஓரளவு தணியச் செய்தது. அதிகரித்த விலைகள் காரணமாக பால் மற்றும் பால் உற்பத்திகளின் மீதான செலவினம் (4 சத வீதம்) அதிகரித்தது. 1996இல் யூலையில் உரிமத் தேவைப்பாடு நீக்கப்பட்டதன் பின் உருளைக் கிழங்கு மற்றும் பெரியவெங்காயம் என்பவற்றின் இறக்குமதிகளில் ஏற்பட்ட கடுமையான அதிகரிப்புக்களின் பகுதியொன்றின் விளைவாக ஏனைய உணவு இறக்குமதிகள் 10 சத வீதத்தினால் உயர்வடைந்தன. குறைவடைந்த பன்னாட்டு விலைகள் மற்றும் 9 சதவீதத்தால் வீழ்ச்சியுற்ற அளவு என்பனவற்றின் விளைவாக சீனி இறக்குமதிச்செலவு 11 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது.

அட்டவணை 9.5
முக்கிய இறக்குமதிகளின் அளவு (அ)

'000 தொன்

| விடயம் | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 (ஆ) |
|---|---|---|---|---|---|
| அரிசி | 237 | 209 | 58 | 9 | 341 |
| 1ம் காலாண்டு | 67 | 48 | 37 | 8 | 1 |
| 2ம் காலாண்டு | 32 | 47 | 12 | ... | 23 |
| 3ம் காலாண்டு | 38 | 17 | 5 | ... | 117 |
| 4ம் காலாண்டு | 100 | 96 | 4 | 1 | 201 |
| கோதுமை | 709 | 771 | 826 | 1,057 | 913 |
| 1ம் காலாண்டு | 130 | 207 | 178 | 315 | 201 |
| 2ம் காலாண்டு | 154 | 226 | 259 | 213 | 303 |
| 3ம் காலாண்டு | 260 | 208 | 222 | 323 | 157 |
| 4ம் காலாண்டு | 165 | 130 | 168 | 206 | 252 |
| சீனி | 370 | 394 | 491 | 417 | 381 |
| 1ம் காலாண்டு | 68 | 146 | 127 | 133 | 94 |
| 2ம் காலாண்டு | 89 | 129 | 147 | 76 | 84 |
| 3ம் காலாண்டு | 128 | 78 | 134 | 95 | 58 |
| 4ம் காலாண்டு | 84 | 40 | 83 | 113 | 146 |
| பெற்றோலியம் (மசகெண்ணெய்) | 1,297 | 1,791 | 1,898 | 1,860 | 2,033 |
| 1ம் காலாண்டு | 369 | 369 | 503 | 332 | 566 |
| 2ம் காலாண்டு | 312 | 553 | 547 | 452 | 493 |
| 3ம் காலாண்டு | 176 | 370 | 364 | 584 | 466 |
| 4ம் காலாண்டு | 439 | 498 | 484 | 492 | 508 |
| வளமாக்கி | 340 | 465 | 427 | 452 | 361 |
| 1ம் காலாண்டு | 72 | 113 | 99 | 185 | 104 |
| 2ம் காலாண்டு | 103 | 108 | 159 | 97 | 60 |
| 3ம் காலாண்டு | 66 | 110 | 71 | 56 | 53 |
| 4ம் காலாண்டு | 99 | 134 | 97 | 115 | 144 |

(அ) சீராக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கைச் சுங்கம்
கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம்
இலங்கை வளமாக்கிக் கம்பனியும் ஏனைய வளமாக்கி முக்கிய இறக்குமதியாளர்களும்
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் (11 சதவீதம்) மற்றும் 1996இல் எதிர்கொள்ளப்பட்ட வங்கிக் கொடுகடன் கிடைப்பனவின் மட்டுப் படுத்தல், இருப்புக்கள் வைத்திருப்பதற்கான உயர் செலவு என்பன காரணமாக உந்து ஊர்திகள், உந்து ஈருருளிகள் போன்ற சில நீண்டகால நுகர்வுப் பொருட்கள் என்பனவற்றில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சியினால் ஏனைய நுகர்வுப் பொருட்கள் மீதான செலவினம் 2 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்களில் ஏற்பட்ட வீழ்ச்சியானது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட் களின் உயர்ந்தளவான பயன்பாட்டின் விளை வாலும் ஏற்பட்டதாகும். எனினும் வானொலிப் பெட்டிகள் மற்றும் தொலைக் காட்சிப் பெட்டிகள் என்பனவற்றின் இறக்குமதிகள் 9 சதவீதத்தால் அதிகரித்தன. இது வெளிநாடுகளில் உள்ள இலங்கை தொழிலாளர்களின் பணவனுப்பல் களின் உறுதியான பாய்ச்சலினால் உள்ளூர்க் கேள்வி தொடர்ந்தும் வலிமையடைந்ததனால் ஏற்பட்டதாகும்.

## இடைநிலைப்பொருட்கள்

பெற்றோலியப் பொருட்களின் இறக்கு மதிகள் (30 சதவீதம்) மீதான அதிகரித்த செலவினத்தை முக்கியமாகப் பிரதிபலித்து மொத்த இறக்குமதிகளில் தற்போது 50 சத வீதத்திற்கும் மேலான பகுதிக்கு வகைகூறும் இடைநிலைப் பொருட்களின் இறக்கு மதிகள் 7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. எனினும் வளமாக்கியின் இறக்குமதிகளில் (9 சதவீதம்) பாரிய குறைப்பொன்று பதிவுசெய்யப்பட்டது. பெற்றோ லியப் பொருட்களின் இறக்குமதிச் செலவில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பானது மசகெண்ணெயின் விலைகள் மற்றும் அளவு என்பன அதிகரித்தமையினால் ஏனைய பெற்றோலியப் பொருட்களில் ஏற்பட்ட அதிகரிப்பொன்றின் காரணமாகவும் ஏற்பட்ட தெனலாம். 1995 பிற்பகுதியில் கொலன்னாவ எண்ணெய் சேகரிப்புத் தாங்கி தீப்பிடித்ததனால் இழந்த இருப்புக்களை மீள் நிரப்புச் செய்ய வேண்டி இருந்தமையால் மசகெண்ணெய் இறக்கு மதிகளின் அளவு 9 சதவீதத்தால் 2,033 ஆயிரம் மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. அத்துடன் 1996இல் எண்ணெய் சுத்திகரிப்பு வழமையான தொழிற்பாட்டு ஆண்டொன்றினைக் கொண்டி ருந்தது. மேலும் இலங்கை மின்சார சபையின் வலு உருவாக்கம் மற்றும் தனியார் துறையின் வலு உருவாக்கங்களின் பயன்பாடு என்பன வற்றிற்கான பெற்றோலியப் பொருட்களின் அதிகரித்த பயன்பாட்டினைப் பிரதிபலித்து குறிப்பாக பாரடீசல் மற்றும் உலை எண்ணெய் போன்ற சுத்திகரிக்கப்பட்ட பொருட்களின் இறக்கு மதிகள் 34 சதவீதத்தினால் 838 ஆயிரம் மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தன. உலகசந்தையில் இருப்புக்கள் குறைவடைந்ததைத் தொடர்ந்து உறுதியான கேள்வியால் உந்தப்பட்டு குறிப்பாக ஆண்டின் மூன்றாம் காலாண்டிலிருந்து நிலவிய பன்னாட்டுச் சந்தைப் போக்கினைப் பின்தொடர்ந்து மசகெண்ணெயின் சராசரி இறக்குமதி விலையும் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.

டொலர் 20.19 இற்கு (விலையும் கேள்வியும்) அதிகரித்தது.

வரட்சி காரணமாக வளமாக்கி இறக்குமதி அளவு 20 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றது. எனினும் விலைகள் 15 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் இறக்குமதிச்செலவு சிஎஉ 50 இலட்சத்தினால் வீழ்ச்சியுற்றது. 1996இல் புடவைகள் மற்றும் ஆடை களின் ஏற்றுமதித் துறையில் காணப்பட்ட போக்குகளிற்கு இணையாக புடவைகளின் இறக்கும திகள் 6 சதவீத மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்தன.

## முதலீட்டுப் பொருட்கள்

1996இல் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 6 சதவீத அதிகரிப்பொன்றினைக் காட்டின. எயர் லங்காவின் வானூர்திகள் தொகுதி மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் 1995 மார்ச்சில் இறக்குமதி செய்யப்பட்ட இறுதி வானூர்தியின் பெறுமதி (சிஎஉ 680 இலட்சம்) நீக்கப்படுமிடத்து முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 16 சதவீத அதிகரிப்பினைக் காட்டின. இது 1995இல் இறக்குமதி செய்யப் பட்டு பொறி மற்றும் கருவி பிரிவினுள் (35 சத வீத அதிகரிப்பு) உள்ளடக்கப்பட்ட 2,006 மின் உருவாக்கிகளுக்கெதிரான 13,386 மின் உருவாக் கிகள் இறக்குமதிகளின் பகுதியளவிலான விளை வொன்றால் ஏற்பட்டதாகும். இலங்கை மின்சார சபையினால் தனியார் துறை வலு உருவாக்கலை ஊக்குவிப்பதற்காக சலுகைகள் வழங்கப்பட்டமை மற்றும் 1996 யூனிலிருந்து 7 மாத காலத்துக்கு இறக்குமதித் தீர்வை முழுமையாக நீக்கப்பட்டமை என்பனவற் றைத் தொடர்ந்து மின் உருவாக்கி களின் இறக்குமதிகள் இவ்வாண்டில் கணிசமாக வளர்ச்சியடைந்தன. தொலைத்தொடர்பு துறையில் வெளிநாட்டு முதலீடுகள் அதிக ரித்தமையினைப் பிரதிபலித்து இவ்வாண்டில் தொலைத்தொடர்பு பொறி மற்றும் கருவியின் இறக்குமதிகள் 1995இன் சிஎஉ 110 இலட்சத் திலிருந்து சிஎஉ 340 இலட்சத்திற்கு இரண்டு மடங்கிற்கும் மேலாக வளர்ச்சியடைந்தன. ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட விலையிடலின் காரணமாக போக்குவரத்துத் துறையில் முதலீடு செய்வது குறைந்த கவர்ச்சிகரமானதாக இருந்ததனால் பயணிகள் போக்குவரத்து ஊர்திகளின் இறக்குமதி 24 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

## 9.4 பணிகள்

சுற்றுலாவிலிருந்தான குறைந்த பெறுகை கள், முதலீட்டு வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, மற்றும் இவ்வாண்டில் வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன காரணமாக பணிகள் கணக்கு 1995இன் சிஎஉ 100 இலட்சம் மிகை யொன்றிலிருந்து 1996இல் சிஎஉ 680 இலட்சம் கொண்ட பற்றாக்குறையொன்றிற்கு மாறியது. இவ்வாண்டில் அதிகரித்தளவிலான கப்பல் சரக்குகள் மீள் கப்பலேற்றப்பட்டதன் (32 சதவீதம்) விளைவாக துறைமுகப் பணிகளிலிருந்தான பெறுகைகள் 1996இல் 23 சதவீதத்தினால் அதிகரித்தது. அரச பணிகள் மற்றும் ஏனைய பணிகளிலிருந்தான பெறுகைகளும் அதிகரிப்பி னைப் பதிவு செய்தன. கப்பற் கட்டணங்களின் பொதுவான வீழ்ச்சிக்கு மத்தியிலும் கப்பல் சரக்குகளின் அளவுகள் அதிகரித்தமையினால் கப்பல் கூலி வணிகக் காப்புறுதி என்பனவற்றிலும் மற்றும் வணிகமல்லாக் காப்புறுதியிலும் வெளிக்கொடுப்பனவுகள் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன.

சனவரியில் கொழும்பு கோட்டையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பின் பின் விளைவாக இலங்கைச் சுற்றுலாக் கைத்தொழில் ஆண்டின் பெரும்பாலான பகுதிகளில் தாழ்வடைந்திருந்த துடன் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியளவில் மெதுவான மீட்சியொன்றினையும் சுட்டிக் காட்டியது. சுற்றுலா வருகைகள் 1995இன் திசெம்ப ருடன் ஒப்பிடுகையில் 1996 திசெம்பரில் 12 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. எனினும் முழு ஆண்டுக்காலப் பகுதிக்குமான வருகை யானது 25 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த வேளையில் சுற்றுலா வருமானங்களும் இதையொத்த வீழ்ச்சியை சுட்டிக்காட்டின. பயணிகள் கட்டணங்களிலிருந்தான பெறுகைகள் இவ் வாண்டில் 14 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றன. வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக குடிபெயர்தல், கல்வி மற்றும் விடுமுறைப் பயணம் என்பன கிட்டத்தட்ட 1995இல் காணப்பட்ட அதே போக்கி னைக் கொண்டிருந்தமையினால் பயணங்கள் மீதான வெளிப்பாய்ச்சல்கள் சிஎஉ நியதிகளில் ஓரளவிற்கு வீழ்ச்சியுற்றன.

அட்டவணை **9.6**
தேறிய பணிகளும் மாற்றல்களும்

| விடயம் | சிஎஉ. ப. இலட்சம் | | ரூபா.ப.இலட்சம் | |
|---|---|---|---|---|
| | 1995 | 1996(அ) | 1995 | 1996(அ) |
| 1. துறைமுகம், போக்குவரத்து, காப்பறுதி | 88 | 94 | 6,802 | 7,541 |
| 2. பயணம் | 26 | -7 | 2,031 | -517 |
| 3. முதலீட்டுவருமானம் | -90 | -139 | -6,958 | -11,154 |
| இலாபங்களும் பங்கு இலாபங்களும் | -46 | -43 | -3,599 | -3,473 |
| வட்டி | -43 | -96 | -3,358 | -7,682 |
| 4. அரச பணிகள் | -7 | -5 | -568 | -362 |
| 5. ஏனைய பணிகள் | -7 | -12 | -544 | -935 |
| மொத்தப் பணிகள் | 10 | -68 | 763 | -5,427 |
| தனியார் மாற்றல்கள் | 448 | 492 | 34,820 | 39,485 |
| அலுவல்சார் மாற்றல்கள் | 114 | 106 | 8,896 | 8,515 |
| மொத்த மாற்றல்கள் | 562 | 598 | 43,716 | 48,000 |

(அ) தற்காலிமாகவை மூலம்: இலங்கை மத்திய வங்கி

கடந்த இரு ஆண்டுகளில் நாட்டின் வெளி நாட்டுச் சொத்துக்கள் சிஎஉ 910 இலட்சத்தால் குறைவடைந்தமை மற்றும் 1996இல் பன்னாட்டு வட்டிவீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் என்ப வற்றின் தாக்கங்களைப் பிரதிபலித்து முதலீட்டு வருமான உட்பாய்ச்சல்கள் சிஎஉ 270 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவின் கொடுகடன் மெதுவாக வளர்ச்சியடைந்த நிலையில் முதலீட்டு சபை தொழில் முயற்சி களினால் மேற் கொள்ளப்பட்ட புதிய முதலீடு களில் ஒரு பகுதி இலாபங்களை மீள் முதலீடு செய்வதன் ஊடாக நிதியிடப்பட்டதனால் இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் என்பன வற்றின் பேரிலான முதலீட்டு வருமான வெளிப்பாய்ச்சல்கள் இவ்வாண்டில் 6 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றன. இவ்வபிவிருத்திகளின் தேறிய விளைவாக பணிப்பெறுகைகள் 6 சத வீதத்தினால் வீழ்ச்சியடைந்தும் மொத்தப் பணிக்கொடுப்பனவுகள் 6 சதவீதத்தால் அதி கரித்தும் பணிகள் கணக்குகளில் பற்றாக்குறை ஒன்றினை உருவாக்கின.

## 9.5 மாற்றல்கள்

தனியார் மற்றும் அலுவல்சார் மாற்றல் களை உள்ளடக்கிய தேறிய மாற்றல்கள் இவ்வாண்டில் 6 சதவீதத்தால் சிஎஉ 5,980 இலட்சத்திற்கு அதிகரித்தன. தனியார் மாற்றல் பெறுகைகளும், கொடுப் பனவுகளும் இவ் வாண்டில் அதிகரித்த வேளையில் அலுவல்சார் மாற்றல்கள் சிஎஉ 1,060 இலட்சத்திற்கு வீழ்ச்சி யடைந்தன. யப்பானும் (37 சதவீதம்), நோர் வேயும் (31 சதவீதம்) அலுவல்சார் மாற்றல்களின் முக்கிய நன்கொடையாளர்களாகும். இக் கொடைகளின் கிட்டத்தட்ட 70 சதவீதமானவை செயற்றிட்ட உதவி வடிவில் பெற்றுக் கொள்ளப்பட்டன. குடும்பங் ளின் பேணலுக்காக வெளிநாட்டிற்குத் தொழிலுக்காக குடி யகன்றோரால் செய்யப்படும் பணவனுப் பல்களின் வளர்ச்சியில் ஏற்பட்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்து தனியார் மாற்றல் பெறுகைகள் 10 சதவீதத்தினால் சிஎஉ 5,790 இலட்சத்திற்கு அதிகரித்தன. தாராளமயமாக்கல் செய்முறையின் கீழ் குடி பெயர்ந்து செல்லும் இலங்கையர்களுக்கு 1993 இலிருந்து அதிகரித்த குடிப்பெயர்வு படிகள் அனுமதிக்கப்பட்டதனை பகுதியளவில் பிரதி பலித்து தனியார் மாற்றல் கொடுப்பனவுகள் இவ்வாண்டில் 11 சதவீதத்தினால் அதிகரித்தன. தனியார் பணவனுப்பல்கள் 1996இல் தேசிய சேமிப்புக்களில் 27 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தன.

## 9.6 மூலதன அசைவுகள்

மோசமான முதலீட்டு சூழ்நிலையின் மத்தியில் தனியார் மூலதன உட்பாய்ச்சலின் மேம்பாட்டின் மத்தியிலும் தேறிய மூலதன உட்பாய்ச்சல்கள் 1995இன் சிஎஉ 3,990 இலட்சத்திலிருந்து 1996இல் சிஎஉ 2,710 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தமையினால் மூலதனக்கணக்கு மோசமடைந்தது. இது முக்கிய மாக பாதுகாப்புத் தொடர்பான வர்த்தக கொடு கடன்களின் மீள் கொடுப்பனவை பகுதியளவில் பிரதிபலித்து அரசிற்கான சலுகைகளற்ற தேறிய மூலதன உட்பாய்ச்சல்கள் நடைமுறைக்கணக்கு பற்றாக்குறையில் கிட்டத்தட்ட 72 சதவீதத்தினை நிதியிடக்கூடியதாக இருந்தமையினால் சென்மதி




வரைபடம் 9.5
மூலதனப் பாய்ச்சல்கள்

நிலுவையில் சிஎஉ 630 இலட்சம் கொண்ட பற்றாக்குறையொன்று ஏற்பட்டது.

## நீண்டகால மூலதனம்

தனியார் நீண்டகால மூலதன உட்பாய்ச்சல்களில் மேம்பாடொன்று பதிவுசெய்யப்பட்ட போதிலும் நீண்டகால மூலதன உட்பாய்ச்சல் 1996இல் 15 சதவீதத்தால் சிஎஉ 5,370 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. 1995 உடன் ஒப்பிடுகையில் 1996இல் பாதுகாப்புத் தொடர்பான சலுகையற்ற கொடுகடனில் ஏற்பட்ட முக்கிய வீழ்ச்சி காரணமாக அரசிற்கான நீண்டகால மூலதன உட்பாய்ச்சல்கள் இவ்வாண்டில் 27 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றன. அதேவேளை சலுகைரீதியான உதவிகளின் உட்பாய்ச்சல்கள் 1995இன் சிஎஉ 2,950 இலட்சத்திலிருந்து 1996 இல் சிஎஉ 2,930 இலட்சத்திற்கு சிறிதளவான வீழ்ச்சியைப் பிரதிபலித்தன. கடந்த காலத்தைப் போன்றே அரசிற்கான சலுகை ரீதியான உதவிகளின் முக்கிய மூலங்களாக ஆசிய அபிவிருத்தி வங்கி (சிஎஉ 1,030 இலட்சம்), யப்பான் (சிஎஉ 980 இலட்சம்) மற்றும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு (சிஎஉ 710 இலட்சம்) என்பன விளங்கின.

உள்ளூர் முதலீட்டுச் சூழலுக்கு பரிச்சயப்பட்ட வெளிநாட்டு தனியார் முதலீட்டாளர்கள் அவர்களது முதலீட்டுத் தீர்மானங்களில் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்தியதாக தோன்றுகின்றது. 1995இன் சிஎஉ 100 இலட்சத்திலிருந்து 1996இல் சிஎஉ 600 இலட்சத்திற்கு தேறிய வெளிநாட்டு நேரடி முதலீட்டில் ஏற்பட்ட கவர்ச்சிகரமான அதிகரிப்பு இதற்கு சான்றளித்தது. இது வெளி நாட்டுக் கிளைகளை திறப்பதற்காக இலங்கை வங்கியினால் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளினால் முக்கியமாக எழுகின்ற சிஎஉ 90 இலட்சம் கொண்ட முதலீட்டு வெளிப்பாய்ச்சலை கழித்தபின் உள்ளதாகும். அதேவேளை வரையறுத்த ஓரியன்ட் லங்கா (சிஎஉ 130 இலட்சம்) மற்றும் வரையறுத்த இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம் (சிஎஉ 100 இலட்சம்) என்பன கூட்டு முதலீட்டாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட சிஎஉ 230 இலட்சம் கொண்ட தனியார் மயமாக்கல் பணப்பெறுகைகளும் சென்மதி நிலுவையின் திரண்ட பற்றாக்குறையினைக் கட்டுப்படுத்துவதற்கு சாதகமான பங்களிப்பினைச் செய்தன.

எயர்லங்கா மீள் தொகுதியிடல் நிகழ்ச்சித் திட்டத்திற்கான நிதியிடல் ஒழுங்குகள் முடிவுக்கு வந்தமை, வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் அலகின் முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளுக்கான கடன் 'வழங்கலில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் கொழும்பு கில்டன் கோட்டலின் நிர்மாணத்திற்கென முன்னர் பெற்றுக்கொண்ட கடன்களின் பேரில் வரையறுத்த கோட்டல் டெவலப்பர்ஸ் இனால் செய்யப்பட்ட மீள் கொடுப்பனவு என்பனவற்றின் முக்கிய காரணத்தினால் தனியார் நீண்டகால கடன்களின் தேறிய உட்பாய்ச்சல்கள் 1995இன் சிஎஉ 490 இலட்சத்திலிருந்து 1996இல் சிஎஉ 20 இலட்சத்திற்குத் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன.

கேபிள் முறைகளின் வழங்கலும், நிறுவலும் மற்றும் தொலைத்தொடர்பு வசதிகளின் மேலதிக விரிவாக்கம் என்பனவற்றிற்காக சிறீலங்கா ரெலிகொம் (சிஎஉ 900 இலட்சம்) மற்றும் சிறிய, நடுத்தர அளவு செயற்றிட்டங்களுக்கென நீண்டகால கொடுகடன்களை வழங்குவதற்காக இரு அபிவிருத்தி வங்கிகளினாலும் (சிஎஉ 290 இலட்சம்) செய்து கொள்ளப்பட்ட நீண்டகால கடன்களுக்கான ஒப்பந்தங்களின் பேரிலான சிஎஉ 670 இலட்சம் கொண்ட பகிர்ந்தளிப்புக்கள் மூலதன உட்பாய்ச்சல்களில் சாதகமான அபிவிருத்திகளைக் கொண்டிருந்தன. அதே வேளை முன்னைய ஆண்டின் சிஎஉ 470 இலட்சம் பகிர்ந்தளிப்புக்களுக்கு மாறாக வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் அலகின் முதலீட்டுச்சபை தொழில் முயற்சிகளுக்கான

கடன் வழங்கல் சிஎஉ 370 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

## குறுங்கால மூலதனம்

தேறிய குறுங்கால மூலதன உட்பாய்ச்சல்கள் 1996இல் சிஎஉ 160 இலட்சத்திலிருந்து சிஎஉ 300 இலட்சத்திற்கு அதிகரித்தன. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அதிகரித்த குறுங்காலக் கடன்பெறுகைகள், பட்டியலிடப்பட்ட முதலீடுகளின் பேரிலான தேறிய உட்பாய்ச்சலின் நேர்மாற்றம், வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் அலகிலிருந்தான முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளின் கடன் பெறுகைகள் முதலீட்டுச்சபை மற்றும் முதலீட்டுச் சபையல்லா வர்த்தக கொடுகடன்கள் இவ் வாண்டில் வீழ்ச்சியடைந்தமை என்பனவற்றின் கூட்டு விளைவால் ஏற்பட்டதாகும். 1995இன் பிற்பகுதியில் எண்ணெய்க் களஞ்சிய வசதிகள் சேதமாக்கப்பட்டதன் விளைவாக இருப்புக்கள் இழக்கப்பட்டமை மற்றும் 1996இல் நீர்மின் வலு பற்றாக்குறையிலிருந்து மீளுவதற்காக அதிகளவு வெப்பமின்வலு உருவாக்கப்பட்டமை என்பன காரணமாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இறக்குமதித் தேவைப்பாடுகள் கணிசமாக அதிகரித்தன. முன்னைய ஆண்டின் சிஎஉ 100 இலட்சம் கொண்ட தேறிய மீள் கொடுப்பனவொன்றிற்கு எதிராக வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் அலகு மற்றும் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் அலகல்லா மூலங்களிலிருந்தான இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் குறுங்காலக் கடன் பெறுகை 1996இல் சிஎஉ 240 இலட்சம் கொண்ட தேறிய பகிர்ந்தளிப்பொன்றாக விளங்கியது. அதேவேளை மந்தமான பொருளாதார நிலைமை மற்றும் மின்சார நெருக்கடி நிலை காரணமாக ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களிலும் இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருள் இறக்குமதிகளில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சி என்பன காரணமாக முதலீட்டுச் சபை மற்றும் முதலீட்டுச் சபை யல்லாத் தொழில் முயற்சிகள் குறுங்கால வர்த்தக ரீதியான கொடுகடன்களுக்கான கேள்வி ஆண்டின் முற்பகுதியில் வீழ்ச்சியுற்றன. முதலீட்டுச்சபை தொழில் முயற்சிகளின் கரை கடந்த நிறுவனங்களின் நிலுவைகள் தொடர்ந்தும் அதிகரித்தன.

பட்டியலிடப்பட்ட முதலீடுகளினூடான தேறிய குறுங்கால மூலதன உட்பாய்ச்சல்கள் இவ்வாண்டில் சிறிதளவால் அதிகரித்தன. ஆனால் இது 1990இன் முற்பகுதிகளில் பங்குச் சந்தை விலைகள் முனைப்பாக அதிகரித்துச் சென்றபோது காணப்பட்ட மட்டங்களிலும் குறைவானதாக இருந்தது. நிச்சயமற்ற பாதுகாப்பு நிலைமை, மின்சாரப் பற்றாக்குறைகள் மற்றும் கைத்தொழில் வெளியீட்டிலும் கூட்டு நிலையங்களின் இலாபங்களிலும் பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்த தொழிலாளர் அமைதியின்மை என்பனவற்றின் விளைவாக ஆண்டு முழுவதிலும் கொழும்பு பங்கு சந்தையில் விலைகள் தொடர்ச்சியாக சரிவடைந்து செல்லும் உணர்வினைப் பிரதிபலித்து பங்குச் சந்தையில் வெளிநாட்டு பங்குபற்றல் படுமோசமாக வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலுள்ள பல நாடுகளிலும் முக்கியமாக தொழிநுட்பத்துறைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்களின் காரணமாக மேம்பாடடைந்த பொருளாதார அடிப்படைகளினால் உந்தப்பட்டு பங்கு விலைகள் அதிகரித்ததன் விளைவாக ஆசியப் பிராந்தியத்திலிருந்தான வெளிநாட்டு முதலீடுகளின் பொதுவானதொரு நகர்வு பட்டியலிடப்பட்ட முதலீடுகளின் மீது மோசமான தாக்கத்தைக் கொண்டிருந்தது.

## 9.7 செலாவணிவீத அசைவுகள்

1995 திசெம்பர் இறுதிக்கும் 1996 திசெம்பர் இறுதிக்குமிடையில் இலங்கை ரூபா அதன் இடையீட்டு நாணயமான ஐ.அ.டொலருக்கெதிராக 4.7 சதவீதத்தினாலும் சிஎஉ இற்கு எதிராக 1.2 சதவீதத்தாலும் பெறுமான தேய்வடைந்தது. சிஎஉ இற்கு எதிரான ரூபாவின் குறைந்தவீத பெறுமான தேய்வானது இவ்வாண்டில் பன்னாட்டு செலாவணிச் சந்தைகளில் ஸ்டேர்லிங் பவுண் தவிர்ந்த முக்கிய நாணயங்களுக்கெதிராக ஐ.அ.டொலர் பெறுமானம் வளர்ச்சியடைந்ததன் விளைவால் ஏற்பட்டதாகும்.

வர்த்தக நிறையேற்றப்பட்ட அடிப்படையில் ஐ.அ.டொலர் முக்கிய நாணயங்களுக்கெதிராக 3.6 சதவீதத்தினால் பெறுமானம் வளர்ச்சியடைந்தது. வர்த்தகப் பங்காளர்கள், போட்டி

அட்டவணை **9.7**
செலாவணி வீத அசைவுகள்

| நாணயம் | வெளிநாட்டுநாணய அலகு ஒன்றிற்கு ரூபா | | | | | | முன்னைய ஆண்டினைவிட சதவீதமாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டு இறுதி வீதங்கள் | | | ஆண்டுச்சராசரி | | | புள்ளிக்குப்புள்ளி | | ஆண்டுச்சராசரி | |
| | 1994 | 1995 | 1996 | 1994 | 1995 | 1996 | 19951994 | 19961995 | 19951994 | 1996/1995 |
| டியூச் மார்க் | 32.16 | 37.76 | 36.46 | 30.45 | 35.81 | 36.75 | -14.8 | 3.6 | -15.0 | -2.5 |
| பிரான்சிய பிராங்கு | 9.32 | 11.05 | 10.81 | 8.90 | 10.27 | 10.81 | -15.7 | 2.2 | -13.3 | -5.0 |
| இந்திய ரூபா | 1.59 | 1.54 | 1.58 | 1.58 | 1.58 | 1.56 | 3.1 | -2.5 | -0.5 | 1.4 |
| யப்பானிய யென் | 0.50 | 0.53 | 0.49 | 0.48 | 0.55 | 0.51 | -4.8 | 7.6 | -11.7 | 7.7 |
| ஸ்டேர்லிங் | 78.05 | 84.25 | 95.86 | 75.68 | 80.88 | 86.34 | -7.4 | -12.1 | -6.4 | -6.3 |
| ஐ.அ.டொலர் | 49.98 | 54.05 | 56.71 | 49.42 | 51.25 | 55.27 | -7.5 | -4.7 | -3.6 | -7.3 |
| சிஎஉ | 72.76 | 80.39 | 81.38 | 70.75 | 77.74 | 80.23 | -9.5 | -1.2 | -9.0 | -3.1 |

*(அ) இலங்கை ரூபாவுக்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன சய அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது.*

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

**வரைபடம் 9.6**
**செலாவணி வீதச் சுட்டெண்கள்**

**வரைபடம் 9.6.1**
**பெயரளவு பயன்தரு செலாவணி வீதம்**




**வரைபடம் 9.6.2**
**உண்மைப் பயன்தரு செலாவணி வீதம்**




யாளர்கள் ஆகியோர்களுடனான இலங்கையின் பெயரளவு பயன் தரு செலாவணி வீத சுட்டெண் 1996இல் 3.9 சத வீத பெறுமானத் தேய்வினைச் சுட்டிக் காட்டியது. சந்தையில் காணப்பட்ட செலாவணி வீதத்தின் பெயரளவு பெறுமானத் தேய்மானமானது இலங்கைக்கும் அதன் வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டியாளர்களுக் கிடையிலான பணவீக்க வேறுபாடுகளை முழுமை யாக எதிரீடு செய்யாமையினால் உண்மைப் பயன்தரு செலாவணி வீத சுட்டெண் 6.6 சதவீதத்தினால் பெறுமான வளர்ச்சி யடைந்தது. இந்நிலைமையானது பெருமளவிற்கு 1996இல் பெரும்பாலான முக்கிய நாணயங்களுக்கெதிராக ஐ.அ.டொலர் பெறுமான வளர்ச்சியொன்றைச் சுட்டிக்காட்டிய குறுக்கு வீதங்களின் நடத்தையின் விளைவால் ஏற்பட்டதாகும்.

## 9.8 வெளிநாட்டு சொத்துக்கள்

இலங்கையின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1995 இறுதியின் சிஎஉ 17,290 இலட்சத்திலிருந்து 1996 இறுதியில் சிஎஉ 17,010 இலட்சத்திற்கு 2 சதவீதத்தினால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தன. இவ்வீழ்ச்சியானது இவ்விரு காலப்பகுதிகளுக்குமிடையில் மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்கள் 3 சதவீதத்தினால் சிஎஉ 13,340 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தமை, வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்கள் 3 சதவீதத்தினால் சிஎஉ 3,510 இலட்சத்திற்கு அதிகரித்தமை மற்றும் அரசின் வெளிநாட்டுச் சொத்துக்கள் சிஎஉ 40 இலட்சத்தினால் சிஎஉ 160 இலட்சத்திற்கு அதிகரித்தமை என்பனவற்றின் கூட்டு விளைவால் ஏற்பட்டதாகும். மத்திய வங்கியி னதும் அரசினதும் வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கிய மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் இவ்விரு ஆண்டுகளுக்கு மிடையில் சிஎஉ 13,870 இலட்சத்திலிருந்து சிஎஉ 13,500 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. 1996 இறுதியில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1997இற்கு

அட்டவணை 9.8
இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள்

| காலமுடிவில் உடைமையாளர் | சிஎஉ. ப. இலட்சம்(அ) | | | | | ரூபா.ப.இலட்சம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 |
| 1. அரச (ஆ) | 23 | 23 | 16 | 12 | 16 | 1,482 | 1,597 | 1,132 | 938 | 1,295 |
| 2 அரச முகவர்கள் | ... | ... | 0 | 0 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 |
| 3 மத்திய வங்கி (இ) | 658 | 1,194 | 1,373 | 1,375 | 1,334 | 41,592 | 81,404 | 99,859 | 110,521 | 108,506 |
| 4. வர்த்தக வங்கிகள் | 366 | 326 | 403 | 341 | 351 | 23,161 | 22,256 | 29,349 | 27,446 | 28,549 |
| 5 மொத்தம் | 1,047 | 1,544 | 1,792 | 1,729 | 1,701 | 66,236 | 105,258 | 130,340 | 138,905 | 138,349 |
| 6 மாதங்களின்படி மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் | | | | | | | | | | |
| 6.1 வணிக வர்த்தக இறக்குமதிகள் | 5.1 | 6.5 | 6.5 | 5.9 | 5.5 | | | | | |
| 6.2 பொருட்கள் பணிகளின் இறக்குமதி | 4.2 | 5.5 | 5.5 | 5.0 | 4.6 | | | | | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் கீழான சில விடயங்கள் மட்டும் பன்னாட்டு நாணய நிதியத்துடன் இணங்கப்பட்ட பிரதிநிதித்துவ வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன. இவை தவிர்ந்த ஏனையவை கீழே தரப்பட்டுள்ளன

| ஆண்டு | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 |
|---|---|---|---|---|---|
| சிஎஉ. ஒன்றுக்கு ருபா | 63.33 | 68.19 | 72.76 | 80.39 | 81.38 |

(ஆ) திறைசேரி துணைச் செயலாளரின் சிறப்புச் கொடுகடன் நிலுவைகளை உள்ளடக்குவதற்காக 1985 இலிருந்தான எண் தொகைகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

(இ) வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான ஒதுக்குத் தேவையாக மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ள அவ் வங்கிகளின் வெளிநாட்டு நாணயங்களையும் உள்ளடக்குவதற்காக 1993 இலிருந்தான எண் தொகைகள் திருத்தப்பட்டுள்ளன.

வரைபடம் 9.7
வெளிநாட்டுப்படுகடன்




திட்டமிடப்பட்ட இறக்குமதிகளில் 4.8 மாதங்களுக்கு போதுமானதாகக் காணப்பட்ட வேளையில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் திட்டமிடப்பட்ட இறக்குமதிகளில் 3.8 மாதங்களுக்கான இறக்கு மதிகளை நிதியிடப் போதுமானதாகக் காணப் பட்டன.

## 9.9 வெளிநாட்டுப் படுகடன்

இலங்கையின் மொத்த வெளிநாட்டுப் படு கடன் சிஎஉ 820 இலட்சத்தினால் அதிகரித்து ஆண்டின் இறுதியில் சிஎஉ 64,160 இலட்சமாக விளங்கியதாக மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட இவ்வதிகரிப்பானது பன்னாட்டு அபிவிருத்தி மைப்பு; ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் யப்பான் என்பன வற்றிலிருந்தான அரசிற்கான சலுகை அடிப்படையிலான உதவியாகப் பெறப் பட்ட நடுத்தர மற்றும் நீண்டகாலங்களில் பிரதிபலிக்கப்பட்டது. நடுத்தர மற்றும் நீண்டகால படுகடன்கள் 1995 இறுதியின் சிஎஉ 56,090 இலட்சத்திலிருந்து 1996 இறுதியில் சிஎஉ 56,650 இலட்சத்திற்கு அதிகரித்தன. இதில் அரசின் படுகடன் 80 சதவீதத்திற்கு வகை கூறியது. அதேவேளை சிறிலங்கா ரெலிகொம் மற்றும் தேசிய அபிவிருத்தி வங்கி என்பனவற்றின் அதிகரித்த கடன் பெறுகைகளை பிரதிபலித்து அரச உத்தரவாதங்களுடனான அரச கூட்டுத்தாப னங்களின் படுகடன்கள் சிஎஉ 3,950 இலட்சத்திற்கு உயர்வடைந்தன. கொழும்பு; கில்டன் கோட்டல் உரிமையாளர்களாகிய வரையறுக்கப்பட்ட கோட்டல் டெவலப்பர்ஸ் (இலங்கை) இனால் மேற்கொள் ளப்பட்ட கடன் தீர்ப்பனவு; கொடுப்பனவொன்றின் காரணமாக அரச உத்தரவாதங்களுடனான வெளிநின்ற தனியார் துறையின் கடன்பெறுகைகள் இக்காலப் பகுதியில் சிஎஉ 1,570 இலட்சத்திலிருந்து சிஎஉ 1,400 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. அதேவேளை அரச உத்தரவாதமில்லாத வெளி நின்ற தனியார்துறை கடன் பெறுகைகள் இவ்விரு ஆண்டுகளுக்கிடையில் சிஎஉ 2,490 இலட்சத்திலி

**வரைபடம் 9.8**
**காலாண்டு வெளிநாட்டுச் சொத்துக்கள்**




ருந்து சிஎஉ 2,520 இலட்சத்திற்கு அதிகரித்தன. அமைப்புச் சீராக்கல் வசதியின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களின் மீள் செலுத்துகையினால் பன்னாட்டு நாணய நிதியத்திற்கான மொத்த வெளிநின்ற படுகடன் ஆண்டிறுதியில் சிஎஉ 3,690 இலட்சமாக விளங்கி சிஎஉ 310 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தன.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஒப்புதல் கொடுகடன்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் பெருமளவு காரணத்தினால் வெளிநின்ற குறுங்கால மூலதனம் சிஎஉ 7,250 இலட்சத்திலிருந்து சிஎஉ 7,510 இலட்சத்திற்கு உயர்வடைந்தது. நடுத்தர மற்றும் நீண்டகால படுகடன்கள் தொடர்ந்தும் வெளிநின்ற மொத்தப் படுகடன்களின் பெருமளவு பங்கிற்கு வகை கூறுவதனை முதிர்ச்சி அடிப்படையிலான வெளி நாட்டுப் படுகடன் அமைப்பு வெளிப்படுத்தியது.

## 9.10 படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

நடுத்தர நீண்டகாலக் கடன்களின் கடன் தீர்ப்பனவையும் அனைத்து வெளிநாட்டுக் கடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 1996இல் 18 சதவீதத்தினால் சிஎஉ 5,260 இலட்சத்திற்கு அதிகரித்தன. கடன் தீர்ப்பனவுகள்,

அட்டவணை **9.9**
பகிர்ந்தளிக்கப்பட்டதும் வெளிநின்றதுமான வெளிநாட்டுப்படுகடன்

| விடயம் | சிஎஉ. ப.இலட்சம் | | | | | ரூபா. ப. இலட்சம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1992 | 1993 | 1994 | 1995 | 1996(அ) | 1992 | 1993 | 1994 | 1995 | 1996(அ) |
| 1. நடுத்தர நீண்டகாலப் படுகடன் | 4,624 | 5,060 | 5,384 | 5,609 | 5,665 | 289,679 | 345,083 | 391,714 | 450,040 | 460,057 |
| 1.1 அரச | 3,841 | 4,123 | 4,214 | 4,425 | 4,509 | 243,251 | 281,142 | 306,615 | 355,736 | 366,946 |
| 1.2 அரச உத்தரவாதத்துடனாண அரச கூட்டுத்தாபனங்கள் | 176 | 246 | 349 | 376 | 395 | 11,121 | 16,804 | 25,414 | 30,210 | 32,113 |
| 1.3 அரச உத்தரவாதத்துடனான தனியார்துறை | 129 | 144 | 159 | 157 | 140 | 8,173 | 9,821 | 11,576 | 12,645 | 11,404 |
| 1.4 அரச உத்தரவாதமற்ற அரச கூட்டுத்தாபனங்கள் | 2 | 1 | 1 | 1 | 1 | 151 | 97 | 95 | 96 | 90 |
| 1.5 அரச உத்தரவாதமற்ற தனியார்துறை | 139 | 170 | 237 | 249 | 252 | 8,784 | 11,566 | 17,281 | 20,006 | 20,471 |
| 1.6 ப.நா.நி. எடுப்பனவுகள் | 338 | 376 | 422 | 401 | 369 | 18,199 | 25,653 | 30,734 | 31,347 | 29,033 |
| 2. குறுங்காலப்படுகடன் | 421 | 526 | 707 | 725 | 751 | 24,579 | 31,689 | 44,619 | 58,301 | 61,121 |
| 2. 1 அரச | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 2.2 மத்திய வங்கிக் கடன்பாடுகள் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 2.3 ஏனையவை(ஆ) | 421 | 526 | 707 | 725 | 751 | 24,579 | 31,689 | 44,619 | 58,301 | 61,121 |
| 3. மொத்தப்படுகடன் (1+2) | 5,045 | 5,586 | 6,091 | 6,334 | 6,416 | 314,257 | 376,772 | 436,333 | 508,341 | 521,177 |
| ஒப்பந்தக் குறிப்பு வகைகள் | | | | | | | | | | |
| நடுத்தர நீண்டகாலக் கடன்கள் | | | | | | | | | | |
| (1) செயற்றிட்ட கடன்கள் | 2,556 | 2,711 | 2,891 | 3,103 | 3,187 | 161,873 | 184,859 | 210,354 | 242,585 | 259,355 |
| (2) செயற்றட்டமல்லாக் கடன்கள் | 1,251 | 1,305 | 1,239 | 1,262 | 1,126 | 79,234 | 88,984 | 90,147 | 93,224 | 91,667 |
| (3) நிரம்பலர் கொடுகடன் | 61 | 119 | 111 | 172 | 174 | 3,873 | 8,087 | 8,051 | 13,837 | 14,136 |
| (4) ப.நா.நி. எடுப்பனவுகள் | 338 | 376 | 422 | 401 | 369 | 18,199 | 25,653 | 30,734 | 31,347 | 29,033 |
| (5) ஏனையகடன்கள் (இ) | 418 | 550 | 721 | 671 | 809 | 26,499 | 37,500 | 52,429 | 69,047 | 65,866 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) இலங்கைப் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன்களையும் குறுங்காலக் கடன்பாடுகளையும் உள்ளடக்குகின்றது.
(இ) அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார்துறை கூட்டுத்தாபனங்களின் நீண்ட. காலக்கடன்கயைும் உள்ளடக்கும்.

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்

அட்டவணை **9.10**
வெளிநாட்டுப்படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

| விடயம் | சிஎஉ. ப.இலட்சம் | | | | | ரூபா. ப. இலட்சம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1992 | 1993 | 1994 | 1995 | 1996(அ) | 1992 | 1993 | 1994 | 1995 | 1996(அ) |
| 1. படுகடன் பணிக்கொடுப்பனவுகள் | 382 | 357 | 379 | 444 | 526 | 23,671 | 24,066 | 26,734 | 33,570 | 42,045 |
| 1.1 கடன் தீர்ப்பனவுகள் | 231 | 213 | 214 | 262 | 319 | 14,329 | 14,317 | 15,012 | 19,398 | 25,355 |
| (i) பநா நிதியத்திற்கு | 54 | 18 | 9 | 22 | 31 | 3,359 | 1,119 | 616 | 1,184 | 2,314 |
| (ii) ஏனையவற்றிற்கு | 177 | 195 | 205 | 239 | 287 | 10,969 | 13,198 | 14,396 | 18,214 | 23,041 |
| 1.2 வட்டிக் கொடுப்பனவுகள் | 151 | 144 | 165 | 182 | 208 | 9,342 | 9,750 | 11,723 | 14,172 | 16,691 |
| (i) ப.நா. நிதியத்திற்கு | 8 | 5 | 5 | 5 | 5 | 481 | 363 | 348 | 407 | 409 |
| (ii) ஏனையவற்றிற்கு | 144 | 138 | 160 | 177 | 203 | 8,862 | 9,387 | 11,374 | 13,765 | 16,282 |
| 2. வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகளிலும் பணிகளிலுமிருந்தான வருவாய்கள் | 2,234 | 2,581 | 2,862 | 3,192 | 3,470 | 138,111 | 174,224 | 202,917 | 248,579 | 278,854 |
| 3. வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள், பணிகள் தனியார் மாற்றல்களிலிருந் தான பொறுகைகள் | 2,623 | 3,035 | 3,361 | 3,718 | 4,050 | 162,148 | 204,815 | 238,262 | 289,470 | 325,321 |
| 4. படுகடன்பணி விகிதங்கள் (ஆ) | | | | | | | | | | |
| 4.1 மேலுள்ள 2 இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழுமொத்த விகிதம் | 17.1 | 13.8 | 13.3 | 13.9 | 15.2 | 17.1 | 13.8 | 13.2 | 13.5 | 15.1 |
| (ii) ப.நா.நி. கொடுக்கல் வாங்கள் தவிர்ந்த | 14.3 | 12.9 | 12.8 | 13.1 | 14.1 | 14.4 | 12.9 | 12.7 | 12.9 | 14.1 |
| 4.2 மேலுள்ள 2 இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழுமொத்த விகிதம் | 14.6 | 11.8 | 11.3 | 11.9 | 13.0 | 14.6 | 11.8 | 11.2 | 11.6 | 12.9 |
| (ii) ப.நா.கொடுக்கள் வாங்கல் தவிர்ந்த | 12.2 | 11.0 | 10.9 | 11.2 | 12.1 | 12.2 | 11.0 | 10.8 | 11.0 | 12.1 |
| 5. அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (இ) | 206 | 222 | 223 | 230 | 254 | 12,713 | 14,934 | 15,749 | 17,888 | 20,364 |
| 5.1 மேலேஉள்ள 1இன் பங்காக | 54 | 62 | 59 | 52 | 48 | 51 | 62 | 59 | 53 | 48 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை.
(ஆ) ரூபாய் பெறுமதியிலும் சி.எ.உ. பெறுமதியிலும் கணிக்கப்பட்ட படுகடன்பணி விகிதம் வேறுபடுவதற்கு ஆண்டுப்பகுதியில் செலாவணி வீதங்களில் ஏற்பட்ட மாறுபாடுகளே காரணமாகும்.
(இ) ப. நா. நி. கொடுக்கல் வாங்கல்கள் தவிர்த்து.

வட்டிக் கொடுப்பனவுகள் என்பன முறையே சிஎஉ 570 இலட்சத்தினாலும் சிஎஉ 260 இலட்சத்தினாலும் அதிகரித்தன. 1988இற்கும் 1990இற்கும் இடையில் பெற்றுக்கொள்ளப்பட்ட அமைப்பு சீராக்க வசதியின் பேரிலான மீள் கொடுப்பனவுகளின் காரணமாக ப.நா.நிதியத்திற்கான கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் உயர்வடைந்தன. அரச படுகடன் தொடர்பான கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் சிஎஉ 220 இலட்சத்தினால் அதிகரித்தன. சிறிலங்கா ரெலிகொம்மின் படுகடன் உள்ளிட்ட அரச மற்றும் அரச உத்தரவாதமிடப்பட்ட படுகடன் மீதான கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் முக்கிய காரணத்தினால் வட்டிக் கொடுப்பனவுகள் 1995இன் சிஎஉ 1,820 இலட்சத்திலிருந்து 1996இல் சிஎஉ 2,080 இலட்சத்திற்கு உயர்வடைந்தன. பொருட்கள் பணிகள் மற்றும் தனியார் மாற்றல்கள் என்பனவற்றின் பெறுகைகளின் விகிதமாக படுகடன் பணிக்கொடுப்பனவுகள் இவ்விரு காலப் பகுதிகளுக்கிடையில் 11.9 சதவீதத்திலிருந்து 13.0 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் பொருட்கள் மற்றும் பணிகள் என்பனவற்றின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வளர்ச்சி யினை விஞ்சியதாக படுகடன் பணிக் கொடுப்பனவுகள் வளர்ச்சியடைந்தமையினால் படுகடன் பணி விகிதம் 1995 இல் 13.9 சதவீதத்திலிருந்து 1996இல் 15.2 சதவீதத்திற்கு அதிகரித்தது.

சிறப்புக் குறிப்பு 9

## சென்மதி நிலுவைகள் - புதிய அறிமுகம்

சென்மதி நிலுவைகள் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒரு நாட்டின் பொருளாதாரம் உலகின் ஏனைய நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதாரக்கொடுக்கல் வாங்கல்களை முறைப்படி சுருக்கித்தரும் ஓர் புள்ளிவிபர அறிக்கை என வரைவிலக்கணம் செய்யப் படுகிறது. வதிவோர் மற்றும் வதிவற்றோ ருக்கிடையில் பெரும்பகுதி கொடுக்கல் வாங்கல்கள் பொருட்கள் பணிகள் மற்றும் வருமானம் சார்ந்தவையும் உலகின் எஞ்சிய நாடுகளுக்கான நிதியியல் உரிமை கோரல் மற்றும் பொறுப்புக்களில் ஈடுபடுவோரையும் ஒருபக்க கொடுக்கல் வாங்கல்களான கணக் கீட்டு அடிப்படையை சமப்படுத்துவதற்கு பதிவுகளை எதிரீடு செய்வதில் ஈடுபடும் மாற்றல்களாக (அன்பளிப்புக்களாக) பகுக்கப் பட்டவையும் உள்ளடக்கும். ஓர் கொடுக்கல் வாங்கல் உருவாக்கம், உருமாற்றம் செலா வணி மாற்றல் அல்லது பொருளாதாரப் பெறுமதியை இல்லாமல் செய்தல், பொருட்கள் / அல்லது நிதியியற் சொத்துக்களின் உட மையின் மாற்றங்களில் ஈடுபடல், பணிகளை வழங்கல் அல்லது கூலி மற்றும் முலதனத்தை வழங்கல் என வரைவிலக்கணம் செய்யப் பட்டுள்ளது.

[1] சென்மதி நிலுவைகள் புள்ளிவிபரங்கள், கொள்கை உருவாக்கம், கொள்கை வெளிப் பாட்டின் கண்காணிப்பு, எதிர்வு கூறுதல், உண்மையான மற்றும், நிதியியற் சந்தைகளின் நடவடிக்கைகளைப் பகுப்பாய்வு செய்தல், கல்வி சார்ந்த ஆய்வு உட்பட்ட பல கார ணங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட பொரு ளாதாரப்பகுப்பாய்வுகளை இலகுவாக்கும் பொருட்டு முரண்பாடில்லாத இசைந்த அமைப்பினுள் ஒழுங்கு செய்ய வேண்டி யிருக்கிறது. இது மாறுபாடில்லாததும், பொதுவானதுமான அமைப்பு முறையின் படி தரவை அறிமுகம் செய்தலை உறுதி செய்கிறது. எல்லா நாடுகளும் ஓர் பொதுவான அறிமுகம் செய்தலைப் பின்பற்றுவதன்மூலம் பொதுவான மொழியில் பேசப்படுவதாக கருதப்படுவதுடன் ஒரு தரப்பட்ட நியதி / அல்லது ஒரு கோட் பாடு அதே கருத்தைக் கொண்டிருப்பதனால் நாடுகளுக்கிடையேயான ஒப்பீட்டுக்கும் வசதி செய்யும்.

தற்பொழுது, இலங்கையின் சென்மதி நிலுவைப் புள்ளிவிபரங்கள் பன்னாட்டு நாணய நிதியத்தின் சென்மதி நிலுவைக் கையேட்டின் நான்காவது பதிப்புக்கமைய (1977) இலங்கை மத்திய வங்கியின் ஆண்ட றிக்கைகள் மற்றும் மாதாந்த செய்தித் திரட்டுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. சென்மதி நிலுவைக் கையேடு, ஐக்கிய நாடுகளின் தேசிய கணக்குகள் முறைக் கமையவும், [2] பன்னாட்டு நாணய நிதியத்தின் உறுப்பு நாடுகளின் தேசிய சென்மதி நிலுவைப் புள்ளிவிபரங்களின் தொகுப்பாளர்களுடன் கலந்தாலோசித்து அவர்களின் தேவைகள் மற்றும் கருத்துக்களைப் பிரதிபலிப்பதன் முலமும் தயாரிக்கப்படுகின்றது. பொதுவான அறிமுகத்தின் அமைப்புமுறை அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ளதுடன், புள்ளிவிபரவியல் பின்னிணைப்பு அட்டவணை 91 இலும் தரப்பட்டுள்ளது.

1977ன் பன்னாட்டு நாணய நிதியத்தின் சென்மதி நிலுவைக் கையேட்டின் நான்காவது பதிப்பின் வெளியீட்டிலிருந்து நிறைவான அபிவிருத்திகள் முலமாக பணிகளிலான வர்த்தக வளர்ச்சி மற்றும் நிதியியல் புது முறைகளுக்கான, சென்மதி நிலுவைகளின் நியமங்களின் மறுபயிற்சி, மீள்பகுப்பு,

1. சென்மதி நிலுவைக் கையேடு, பன்னாட்டு நாணய நிதியம், 5ம் பதிப்பு, 1993.
2. தேசிய கணக்குகள் முறையானது உறுப்பு நாடுகளின் தேசிய கணக்குகளை தயாரிப்பதற்கான ஒரு வழிகாட்டியாக ஐக்கிய நாடுகளின் சபையினால் பிரசுரிக்கப்படுகின்றது.

## சிறப்புக் குறிப்பு 9 (தொடர்ச்சி)

அட்டவணை 1

சென்மதி நிலுவை - 1996 (அ)

### சென்மதி நிலுவை கையேட்டுப் படிவம் 4

| விடயம் | சிஎஉ ப. இலட்சம் வரவு | பற்று | தேறிய |
|---|---|---|---|
| பொருட்கள் | 2,822 | 3,731 | (909 ) |
| 1. வாணிபப் பொருட்கள் | 2,822 | 3,730 | (907 ) |
| 2. நாணயமல்லாத் தங்கம் | 0 | 1 | (1 ) |
| பணிகள் | 648 | 716 | (08 ) |
| 3. கப்பற் கூலியும் வணிகக் காப்புறுதியும் | 22 | 34 | (12 ) |
| 4. ஏனைய ஏற்றி இறக்கல் | 214 | 108 | 107 |
| 4.1 பயணக் கட்டணங்கள் | 80 | 63 | 17 |
| 4.2 துறைமுகச் செலவுகள் | 120 | 32 | 89 |
| 4.2 ஏனையவை | 14 | 13 | 1 |
| 5. பயணம் | 115 | 121 | 7 |
| 6. முதலீட்டு வருமானம் | 113 | 252 | (139 ) |
| 6.1 நேரடி முதலீடு | 1 | 44 | (43 ) |
| 6.2 ஏனையவை | 112 | 208 | (96 ) |
| 7. அரசின் செலவினம் (வே.எ.கு.) | 17 | 21 | (5 ) |
| 8. ஏனைய பணிகள் | 168 | 179 | (12 ) |
| 8.1 வணிகமல்லாக் காப்புறுதி | 17 | 9 | 8 |
| 8.2 ஏனையவை | 151 | 170 | (19 ) |
| மாற்றற்கொடுப்பனவுகள் | 685 | 87 | 598 |
| 9. தனியார் | 579 | 87 | 492 |
| 10. அலுவல்சார் | 106 | 0 | 106 |
| நடைமுறைக் கணக்கு | 4,156 | 4,534 | (378 ) |
| மூலதனமும் நாணயத் தங்கமும் | | | |
| நாணயமல்லாத்துறை | 1,084 | 813 | 271 |
| 11. தனியார் முதலீடு | 763 | 648 | 115 |
| 11.1 நீண்டகால | 216 | 131 | 86 |
| நேரடி முதலீடு | 69 | 9 | 60 |
| தனியார் மயமாக்கல் பெறுகை | 23 | 0 | 23 |
| ஏனைய தனியார் நீண்டகால | 124 | 122 | 2 |
| 11.2 குறுகியகால | 547 | 516 | 30 |
| பட்டியலிடப்பட்ட முதலீடு | 53 | 48 | 4 |
| ஏனைய தனியார் குறுகியகால | 494 | 468 | 26 |
| 12. மத்திய அரசு | 321 | 165 | 156 |
| 12.1 நீண்டகால | 293 | 97 | 196 |
| 12.2 ஏனைய நீண்டகால | 29 | 68 | (40 ) |
| 12.3 குறுகியகால | 0 | 0 | - |
| நாணயத்துறை | 599 | 536 | 63 |
| 13. அரசு - சொத்துக்கள் | 11 | 15 | 4 |
| 14. அரசு - பொறுப்புக்கள் | 0 | 0 | 0 |
| 15. வர்த்தக வங்கிகள் - சொத்துக்கள் | 106 | 116 | (9 ) |
| 16. வர்த்தக வங்கிகள் - பொறுப்புக்கள் | 93 | 33 | 59 |
| 17. மத்திய வங்கி - சொத்துக்கள் | 234 | 193 | 41 |
| 18. மத்திய வங்கி - பொறுப்புக்கள் | 155 | 148 | 7 |
| 19. ப. நா. நிதியத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் | 0 | 31 | (31 ) |
| 20. சிஎஉ களின் ஒதுக்கீடுகள் | - | - | - |
| 21. பெறுமதிச் சீராக்கம் | - | - | - |
| 22. நாணயத் தங்கம் | - | - | - |
| 23. பிழைகளும் தவறுகளும் | 44 | 0 | 44 |

### சென்மதி நிலுவை கையேட்டுப் படிவம் 5

| விடயம் | சிஎஉ ப. இலட்சம் வரவு | பற்று | தேறிய |
|---|---|---|---|
| அ பொருட்கள் | 2,822 | 3,731 | (909 ) |
| வாணிபப் பொருட்கள் | 2,822 | 3,730 | (907 ) |
| நாணயமல்லாத் தங்கம் | 0 | 1 | (1 ) |
| ஆ பணிகள் | 535 | 460 | 74 |
| போக்குவரத்து | 234 | 138 | 94 |
| பயணக் கட்டணங்கள் | 80 | 63 | 17 |
| கப்பற் கூலி | 20 | 31 | (13 ) |
| ஏனையவை | 134 | 45 | 67 |
| பயணம் | 115 | 121 | (7 ) |
| காப்புறுதிப் பணிகள் | 19 | 12 | 8 |
| ஏனைய வர்த்தகப் பணிகள் | 151 | 167 | (16 ) |
| அரசின் செலவினம் (வே.எ.கு.) | 17 | 21 | (5 ) |
| இ வருமானம் | 113 | 256 | (142 ) |
| ஊழியர்களுக்கான இழப்பீடு | 0 | 3 | (3 ) |
| நேரடி முதலீடு | 1 | 44 | (43 ) |
| ஏனையவை | 112 | 208 | (96 ) |
| ஈ நடைமுறை மாற்றல்கள் | 617 | 9 | 609 |
| தனியார் | 579 | 9 | 571 |
| பொது அரசு | 38 | 0 | 38 |
| நடைமுறைக் கணக்கு | 4,088 | 4,456 | (368 ) |
| மூலதன நிதிக்கணக்கு | 1,351 | 1,040 | 311 |
| மூலதனக்கணக்கு | 68 | 78 | (10 ) |
| மூலதன மாற்றல்கள் | 68 | 78 | (10 ) |
| பொது அரசு (ஏனைய) | 68 | 0 | 68 |
| ஏனைய துறை (குடிபெயர்வு மாற்.) | 0 | 78 | (78 ) |
| **நிதியியற் கணக்கு** | 1,283 | 962 | 321 |
| தனியார் முதலீடு | 961 | 797 | 165 |
| நீண்டகால | 216 | 131 | 85 |
| நேரடி முதலீடு | 69 | 9 | 60 |
| தனியார் மயமாக்கல் பெறுகைகள் | 23 | 0 | 23 |
| ஏனைய தனியார் நீண்டகால | 124 | 122 | 2 |
| குறுகியகால | 745 | 665 | 80 |
| பட்டியலிடப்பட்ட முதலீடு | 53 | 48 | 4 |
| ஏனைய தனியார் குறுகியகால | 494 | 468 | 26 |
| வர்த்தக வங்கிகள் - சொத்துக்கள் | 106 | 116 | (9 ) |
| வர்த்தக வங்கிகள் - பொறுப்புக்கள் | 93 | 33 | 59 |
| மத்திய அரசு | 321 | 165 | 156 |
| நீண்டகால | 293 | 97 | 196 |
| ஏனைய நீண்டகால | 29 | 68 | (40 ) |
| குறுகியகால | 0 | 0 | - |
| நாணயத்துறை | 400 | 387 | 13 |
| அரசு - சொத்துக்கள் | 11 | 15 | (4 ) |
| அரசு - பொறுப்புக்கள் | 0 | 0 | - |
| மத்திய வங்கி - சொத்துக்கள் | 234 | 193 | 41 |
| மத்திய வங்கி - பொறுப்புக்கள் | 155 | 148 | 7 |
| ப. நா. நிதியத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் | 0 | 31 | (31 ) |
| சிஎஉ களின் ஒதுக்கீடுகள் | - | - | - |
| பெறுமதிச் சீராக்கம் | - | - | - |
| நாணயத் தங்கம் | - | - | - |
| பிழைகளும் தவறுகளும் | 44 | 0 | 44 |

(அ) தற்காலிகமானவை

சிறப்புக் குறிப்பு 9 (தொடர்ச்சி)

மீளவரைவிலக்கணம் செய்தல் என்பவற்றைத் தேவைப்படுத்தியது. பல நாடுகளில் சந்தைச்சீர்திருத்தங்கள் வர்த்த கத்தடைகள் மற்றும் கூடிய மூலதனக் கட்டுப்பாடுகளைத் தளர்வுபடுத்தியும், பெருளாதார நடவடிக்கைகளின் அதிகரித்த உலகமயப்படுத்தலையும் உண்டாக்கின, ஒரு சில தசாப்தங்களுக்கு முன்பு நாடுகளின் சுங்கத்தடைகளைத் தாண்டிய மரபுரிதியான இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளுடன் ஒப்பிடுகையில், தற்பொழுது மீள் ஏற்றுமதி செய்யும் பதனிடல் மற்றும் திருத்தங்களுக்கான பொருட்களும் நாடுகளுக்குள் வருகின்றன . கடந்த காலத்தில் இல்லாமலோ அல்லது குறிப்பிடத்தக்களவிற்கு இல்லாமல் இருந்த தொடர்பூட்டல், கட்டடவாக்கம், கணனிப் பணிகள், உரிமைப்பங்கு, உரிமைக் கட்டணங்கள், மற்றும் தனிப்பட்ட கலாச்சார பொழுதுபோக்குப் பணிகள் இன்று முக்கியம் வாய்ந்து விளங்குகின்றன. பன்னாட்டுப் படுகடன் நெருக்கடிக்கு தீர்வுகளைக் காண்பதற்காக உலக சமுதாயத்தின் முயற்சிகள் படுகடன் மன்னிப்பளித்தல், படுகடன் குறைத்தல், தண்ட வட்டி விதித்தல், நிலுவைகளை மீள் அட்டவணைப்படுத்தல் போன்ற புதிய கருதுகோள்களை உருவாக்கின. பன்னாட்டு மூலதன மாற்றல்களுக்கான பிணைகள் மற்றும் பத்திரங்கள், பணச் சந்தைக்கருவிகள் மற்றும் நிதியியல் ஆவணங்கள் போன்ற கருவிகளின் அபி விருத்தியும், பிரபல்யமும் முக்கியத்துவம் பெற்றுக்காணப்பட்டன. சகல இவ் அபி விருத்திகளும், சென்மதி நிலுவைத்தரவுகளை தொகுக்கும் போது கவனத்திற்கு எடுக்கப் படுவதுடன் பொருத்தமானதாகவும் இருக்க வேண்டும். இதன்படி, பன்னாட்டு நாணய நிதியம் அதன் சென்மதி நிலுவைக்கையேட்டின் திருத்தப்பட்ட ஐந்தாவது பதிப்பை வெளியிட்ட துடன், அதனுடன் இணைந்த சென்மதி நிலுவை தொகுப்பு வழிகாட்டு நூலை 1995 இலும், புத்தகத்தை 1996 இலும் வெளியிட்டன. சென்மதிநிலுவைக்கையேடு 5 இல் அறிமுகப் படுத்தும் முக்கிய மாற்றங்களுக்குள் சில கீழே ஒபபிடப்பட்டும் விபரிக்கப்பட்டும் உள்ளது.

### சென்மதிநிலுவைக் கையேட்டின் 4ஆம் மற்றும் 5ஆம் அமைப்புமுறை

(1) கொடுக்கல் வாங்கல்களுக்கும் (2) கணக்கிலான ஏனைய மாற்றங்களுக்கும் (பெறுமதிசெய்தல், மீழ் மதிப்பிடல் மற்றும் ஏனைய சீராக்கங்கள்) இடையில் மேற் கொள்ளப்பட்டது.சென்மதிநிலுவை கொடுக்கல் வாங்கல்களோ அல்லது ஏனைய மாற்றங் களோ இருப்பிலி மாற்றங்களை விளை விக்கலாம், ஆனால் கொடுக்கல் வாங்கல்கள் மட்டும் சென்மதிநிலுவைக் கணக்கில் பிரதிபலிக்கின்றன. தேசிய கணக்குகள் முறையில் உலகின் எஞ்சிய நாடுகளுக்கான கணக்கு மேலதிகமாக பன்னாட்டு முதலீட்டு நிலமைக்கும் சென்மதி நிலுவைக் கணக்குக்கு இடையிலான இணைப்பு இயலுமானவகையில் கூடியஅளவுக்கு பலப்பட்டும், ஒருமுகப்பட்டும் காணப்படுகிறது. இவ்விரு முறைகளில் குறிப்பிடத்தக்க ஒரு விடயத்தில் ஒரே மாதிரியான கருத்துக்கள் வதிவிடம், மதிப்பீடு, காலக்கெடு, நேரடி முதலீடுகள் மீது மீள்முதலிடப்பட்ட வருவாய்கள் என்பன விளங்கின. தேசிய கணக்குகள் முறையுடன் ஒரு முகப்படுத்தலை அதிகரிப்பதற்கும், சென்மதி நிலுவைக் கையேடும் ஐந்தாம் பதிப்பில் நடைமுறை மற்றும் மூலதன மாற்றல்களுக்கிடையே ஓர் வேறுபாடு அறிமுகப்படுத்தப்பட்டது. இம்மாற்றத்தின் விளைவால் முன்னைய சென்மதி நிலுவைகள் மூலதனக்கணக்கு மூலதனம் மற்றும் நிதியியற் கணக்கு என மீள் பெயரிடப்பட்டது. பன்னாட்டு பணிகள், வருமானம் சில நிதியியற் கொடுக்கல் வாங்கல்கள் என்பவற்றின் நடைமுறைப் படுத்தலிலும் மாற்றங்கள் காணப்பட்டன,

இம்மாற்றங்களையும், நாட்டின் தேவை களையும் கருத்திற் கொள்கையில், இலங்கை 1997 இலிருந்து அதன் சென்மதி நிலுவைகளை அறிமுகம் செய்யும் போது தற்போதைய அதன் சென்மதி நிலுவைத் தரவுகளை அட்டவனை 1 இல் தரப்பட்டுள்ளன. புதிய அமைப்பு முறையைப் பின்பற்றும் பணிகள்

சிறப்புக் குறிப்பு 9 (தொடர்ச்சி)

கணக்கு இரண்டு தனியான துறைகளாக அதாவது பணிகள் மற்றும் வருமானம் எனப் பிரிக்கப்பட்டுள்ளது. சென்மதிநிலுவைகள் நான்காம் பிரிவுக்கு முரணாக, சென்மதி நிலுவைகள் கையேட்டின் ஐந்தாம் பிரிவு நடைமுறைக்கணக்கை பணிகளிலான பன்னாட்டு கொடுக்கல் வாங்கல்களுக்கும் வருமானத்திலான கொடுக்கல் வாங்கல்களுக்குமிடையே ஓர் தெளிவான வேறுபாட்டை எடுத்துக்காட்டுகிறது. சென்மதி நிலுவைகளின் நான்காம் அமைப்பு முறையின்படி தயாரிக்கப்படும் இலங்கையின் சென்மதி நிலுவைப் புள்ளிவிபரங்களில் கூலி வருமானம் ( சம்பளங்கள்) ஏனைய பணிகளின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கையில் முதலீட்டு வருமானம் தனியாக உள்ளடக்கப்பட்டுள்ளது. ஐந்தாம் பதிப்பு வருமானத்தகவல்களின் இரு முக்கிய கூறுகளான ஊழியர்களின் நட்டஈடு மற்றும் முதலீட்டு வருமானம் என்பன நடைமுறைக்கணக்கில் வருமானத்தின் கீழ் தனியான துணைக் கணக்காக அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. இதன்படி தொழிலாளர்களின் சம்பளம் மற்றும் மதியுரைக் கட்டணங்கள் கூலி வருமானமாகக் கணிக்கப் பட்டுள்ளதுடன் இது தொழிலாளர்களின் நட்டஈட்டின்கீழ் காட்டப்பட்டுள்ளது, இது வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் வதியும் அலுவல்களின் நட்டஈட்டையும் உள்ளடக்கியதோடு இவை சென்மதி நிலுவைகள் கையேட்டின் நான்காம் பதிப்பின் கீழ் அரச பணிகளின் கீழ் காட்டப்பட்டுள்ளன. இதே வேளை, வேலையாளர்களின் செலவு பயணப் பணிகளின் கீழ் காட்டப்படும். சொத்துக்கள் வருமானத்தின் கீழ் காப்புரிமை மற்றும் பதிப்புரிமை போன்ற நிதியியல் அல்லாத புலனாகாச் சொத்துக்களின் பாவனைக்கான கொடுப்பனவுகள், சென்மதி நிலுவைகள் கணக்கின் ஐந்தாம் பதிப்பில் அமைந்த முறையில் ஏனைய பணிகளின் கீழ் பதிவு செய்யப்படும். இம் மீள் பகுப்பாய்வுகள் தேசிய கணக்குகளின் முறையில் வருமானக் கருதுகோளுடன் ஒரே முகப் படுவதுடன் சென்மதி நிலுவைகள் வருமானக் கணக்கிற்கும் நிதியியல் கணக்கிற்கிடையேயும் சென்மதி நிலுவைகள் பாய்ச்சல்களுக்கும் பன்னாட்டு முதலீட்டு நிலமைகளை உள்ளடக்கிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் இருப்புக்களிடையேயும் உள்ள இணைப்புக் களைப் பலப்படுத்துகிறது.

இதுவரை தனியார் மாற்றல்கள், தொழிலாளர்கள் பண அனுப்பல்கள் மற்றும் இடம் பெயர்ந்தோர் மாற்றல்களையும் உள்ளடக்கியிருந்தது. பின்னையது, புதிதாக குடியமர்ந்த நாடுகளில் அவர்களின் வீடு மற்றும் சொத்துக்களின் விற்பனையில் பெறும் பணம் போன்ற மூலதன மாற்றல்களைக் கொண்டிருக்கின்றது. எனவே சென்மதி நிலுவைகள் கையேட்டின் ஐந்தாம் பதிப்பின, அமைப்பு முறையின் கீழ் இடம்பெயர்ந்தோரின் மாற்றல்கள், அவை எல்லாவற்றையும் நடைமுறைக்கணக்கில் மாற்றல்களாகக் காட்டும் தற்போதைய நடைமுறையிலிருந்து விலகி மூலதனக்கணக்கில மாற்றல்களாகக் காண்பிக்கப்படும் நடைமுறைக் கணக்கிலான சில விடயங்களின் மாற்றங்கள் மற்றும் மீள்பகுப்பாய்வுகள் இலங்கையின் நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையை, மூலதனக் கணக்கிற்கு நகர்த்தப்பட்ட தேறிய இடம் பெயர்ந்த மாற்றல்களின் வெளிப்பாய்ச்சலுக்கு சமனான அளவால் குறைக்கும்.

தற்போதைய நாணயமல்லா மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள் புதிய அமைப்பு முறையில் மூலதனம் மற்றும் நிதியக்கணக்காக மீள் பெயரிடப்படும். புதிய மூலதனக்கணக்கு ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி நிதி சாராத சொத்துக்களின் (காப்புரிமை, பதிப்புரிமை, உரிமங்கள் போன்றவை ) கையேற்பு, விற்பனை மற்றும் மூலதன மாற்றல்களையும் கொண்டிருக்கிறது. இதன் படி இது பொதுவான அரச படுகடன் மன்னிப்பு (இலங்கைக்கு உரியதல்ல) அரசால் பெறப்பட்ட செயற்திட்ட உதவிகள், மேலே குறிப்பிடப்பட்ட குடி பெயர்ந்தோர் மாற்றல்கள் போன்ற விடயங் களை உள்ளடக்கியிருக்கும். நிதியியற் கணக்கு தற்போதைய மூலதனக்கணக்கில் உள்ள விடயங்களை உள்ளடக்கியிருக்கும்.

சிறப்புக் குறிப்பு 9 (தொடர்ச்சி)

புதிய அமைப்பு முறையின் முக்கிய மாற்றமாக வர்த்தக வங்கிகள் வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை நாணயத் துறையிலிருந்து நிதியியற் கணக்கிற்கு மாற்றப்படுவது விளங்கும். தற்பொழுது, சென்மதி நிலுவையின் பொதுவான நிலுவை வர்த்தகவங்கிகளை உள்ளடக்கிய தேறிய வெளி நாட்டுச் சொத்துகளின் மொத்த மாற்றத்தைக் குறிக்கின்றது. வர்த்தக வங்கிகளின் சொத்துக்கள் மற்றும் பெறுப்புகளின் மாற்றத்தை மூலதனம் மற்றும் நிதியியற்கணக்கிற்கு மாற்றுவதற்காக இரண்டு முக்கிய நியாயப் படுத்தல்கள் இருக்கின்றன. முதலாவதாக, கட்டுப்படுத்தப்பட்ட யுகத்தில் இருந்தது போலன்றி, வர்த்தக வங்கிகள் அவற்றின் வெளிநாட்டுச் செலாவணிக்கொடுக்கல் வாங்கல்களைப் போலவே அவற்றின் வெளி நாட்டுச் செலாவணி மூலவளங்களையும் முகாமைப்படுத்துவதற்கு சுதந்திரம் கொண்டுள்ளன. வெளிநாட்டு கடன்பாடுகள், அவற்றின் மூலதன நிதியங்கள் மற்றும் மூலவளங்களின் 15 சதவீத வரையறைக் குட்பட்ட வகையில் அனுமதிக்கப்பட்டன. எனவே அவற்றை பொதுவான நிலுவையைத்தயாரிக்கும் போது நாணய அதிகாரக்கணக்குடன் சேர்க்காது, புதிதாக வரைவிலக்கணம் செய்யப்பட்ட நிதியியற் கணக்கில் அடக்குவது கருத்துள்ளதாக அமைகிறது. இரண்டாவதாக, பகுப்பளவில் இது பொதுவான நிலுவையின்கூடியளவு கருத்துள்ள தெளிவை எடுத்துக்காட்டுகிறது. புதிதாக வரைவிலக்கணம் செய்யப்பட்ட பொதுவான நிலுவை, தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களிலான மாற்றங்கள் தொடர்பான ஒதுக்குப் பணத்திலான (உயர் வலுப்பணம்) மாற்றங்கள் பொதுவான நிலுவைக்கு மிகவும் சமமானதால் பணவளங்கள் மீதான வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தை நேரடியாக எடுத்துக்காட்டும்.

வர்த்தக வங்கிகளின் தேறிய நிலைமையை நிதியியல் கணக்கில் எடுத்துக் காட்டுவதை உட்படுத்தல், வர்த்தக வங்கிகளின் தேறிய நிலைமை மிகையா அல்லது குறையா என்பதிலும், சென்மதி நிலுவையின் பொதுவான நிலுவை மோசமடையுமா அல்லது முன்னேறுமா என்பதிலும் தங்கியுள்ளது. உதாரணமாக, 1996 இல் பொதுவான சென்மதி நிலுவை நிலைமை, வர்த்தக வங்கிகளின் நாணயத்துறை (சென்மதி நிலுவைக் கையேட்டின் நான்காம் அமைப்பு முறை) சிஎஉ 630 இலட்சம் கொண்ட பற்றாக்குறையை பதிவு செய்திருக்கும் வேளையில் வர்த்தக வங்கிகளின் உள்ளடங்கலான நிதியியற் கணக்கு (சென்மதி நிலுவைக் கையேட்டின் ஐந்தாம் அமைப்பு முறை) பொதுவான சென்மதி நிலுவை நிலமையாக சிஎஉ 130 இலட்சம் கொண்ட பற்றாக்குறையை எடுத்துக்காட்டியது.

புதிய சென்மதி நிலுவைக் கையேட்டின் 5ம் பதிப்பு மாற்றங்களுடன் இணைந்து சிறப்புக் குறிப்பு 10.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள துடன் (நாணய அளவீட்டில் அந்நிய செலாவணி வங்கிக் கூறுகளின் இணைப்பு) இது மத்திய வங்கியின் மாதாந்த செய்தித் திரட்டுகளில் 1997 ம் ஆண்டுக்கான சென்மதி நிலுவைத் தரவுடன் அறிமுகப்படுத்தப்பட விருக்கிறது.

## 9.11 வெளிநாட்டு வர்த்தக கொள்கையும் சூழ்நிலையும்

### இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள்

தேசிய பாதுகாப்பு பொதுமக்கள் நலம் மற்றும் தாவர நோய்ப்பரவல் தடுப்பு ஆகிய காரணங்களுக்காக அவசியமானதெனக் கருதப்பட்ட குறித்துரைக்கப்பட்ட குறுகிய பட்டியலொன்றிற்கு அளவுக் கட்டுப்பாடுகளை மட்டுப்படுத்துவதன் மூலமாக அவற்றைப் படிப்படியாக குறைவடையச் செய்வதே வர்த்தக கொள்கையின் நோக்கமாகும். குறிப்பிட்ட சில கைத்தொழில்களுக்கு மிகக்குறைந்த வர்த்தகப் பாதுகாப்பு அவசியமான பொழுதெல்லாம் அத்தகைய பாதுகாப்புக்கள் பொதுவாக மிகக் குறைந்த தீர்வை போன்றே விலைப்பட்டியல் அடிப்படையிலான நடவடிக்கைகளினூடாக வழங்கப்படுதல்

வேண்டும். இலங்கையானது உயர்ந்தளவில் பாதுகாக்கப்பட்ட வர்த்தகக் கொள்கை முறையிலிருந்து குறைந்த பாதுகாப்பு அமைப்பொன்றிற்கு நகர்ந்து சென்றுள்ளது.

எனினும் 1996இல் சில முரண்பாடான சமிக்ஞைகள் வெளிப்பட்டுள்ளன. உதாரணமாக வர்த்தக கொள்கையில் மேலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை ஏற்படுத்தும் வகையில் உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் மிளகாய் என்பனவற்றின் மீதான இறக்குமதி உரிமத் தேவைப்பாடுகள் 1996 யூலையில் நீக்கப்பட்டன. சோளம் இறக்குமதி உரிமத்தின் கீழ் காணப்பட்டது. 1996 ஓகத்தில் நெல் இறக்குமதி உரிமத்தின்கீழ் கொண்டு வரப்பட்டது. அதேவேளை தொலைவிலிருந்து வானொலி சைகைகள் மூலம் பொம்மைகள் பொதுமக்களின் பாதுகாப்பு காரணங்களுக்காக உரிமத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட வேளையில் பயன்படுத்தியதும் மறுசீரமைப்புச் செய்யப்பட்டதுமான குளிர்ச் சாதன பெட்டிகள் மற்றும் குளிரூட்டிகள் என்பன சுற்றாடல் பாதுகாப்பிற்காக இறக்குமதி உரிமத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. சுற்றாடல் பாதுகாப்பிற்கான அளவுக் கட்டுப்பாடுகளின் (உரிமங்கள் உட்பட) ஏற்புத் தன்மையானது விவாதத்திற்குரிய விடயமாவதுடன் உரிமம் வழங்கலானது உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கு தற்றுணிபு முடிவெடுக்கும் அதிகாரத்தை வழங்குவதனால் நிருவாக ரீதியான நேர்மையீனங்களுக்கு வழிவகுக்கலாம். மாவாலைக் கூட்டு நிலையமான வரையறுக்கப்பட்ட பிறிமா சிலோன் நிறுவனத்துடன் அரசு செய்து கொண்ட உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக கோதுமை, இறுங்கு, கோதுமை மா மற்றும் இறுங்குமா என்பன 1996இல் தொடர்ந்தும் உரிமத்தின் கீழ் காணப்பட்டன. அரசின் ஈடுபாடுளின்றி மாவாலைக் கூட்டு நிலையத்திற்கு நேரடியாக கோதுமை தானியம் விநியோகம் செய்வதை அனுமதித்தல் மற்றும் இறக்குமதி வர்த்தகத்தில் தனியார்துறை தாராளமாக உட்பிரவேசித்தலை இயலச் செய்தல் என்பனவற்றிற்காக மாவாலைக் கூட்டு நிலையத்துடன் உடன்படிக்கைகள் தொடர்பாக மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடாத்துதல் உசிதமானதாகும். 1996 இறுதியில் 6 புள்ளிகள் மட்டத்திலான இசைவாக்கல்முறை கோவையில் காணப்பட்ட ஏறத்தாழ 6,000 மொத்தப் பொருட் களில் 223 பொருட்கள் உரிமக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன.

முன்னைய ஆண்டுகளைப் போன்றே சுற்றாடலைப் பாதுகாத்தல் மற்றும் பண்டைய கலைப்பொருட்களைப் பேணல் என்பனவற்றினை நோக்கங்களாகக் கொண்டு நான்கு வகைகளின் ஏற்றுமதிகள் (முருகைக் கற்பாளங்களும் ஓடுகளும் மர மற்றும் மரப்பொருட்கள், யானைத் தந்த உற்பத்திகள் மற்றும் 1945 இற்கு முன்னர் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட பயணிகள் உந்து ஊர்திகள்) உரிமத்தின் கீழ் இருந்தன.

## வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான தீர்வைகளும் வரிகளும்

தனிப்பட அமைந்த தீர்வைத் தளர்த்தல்கள் மற்றும் விலக்களிப்புக்கள் என்பவற்றால் உருவாகும் திரிபுகளை மிகக்குறைந்த மட்டத்தில் பேணுவதற்காக கடந்த காலத்தில் தீர்வைச் சீர்திருத்தங்கள் வீதங்களைக் குறைத்தல் மற்றும் தீர்வை அமைப்பினை இலகுவாக்கல் என்பன வற்றினூடாக வர்த்தகம் மற்றும் தீர்வை முறைகளை நியாயப்படுத்துவதனைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தன. 1997 வரவு செலவுத்திட்டத்தில் வர்த்தக மற்றும் தீர்வை அமைப்பின் உறுதியான நடைமுறைப் படுத்தல் பல்வேறுவகைப்பட்ட வரிமுறைகள் மற்றும் ஊக்குவிப்புத் திட்டங்கள் என்பனவற்றிலிருந்து எழுகின்ற திரிபுகளை மேலும் நீக்குதல் என்பனவற்றினை நிச்சயப்படுத்துவதற்காக சுங்க நிர்வாகம், வர்த்தக நடைமுறைகளும் பயிற்சிகளும் மற்றும் ஏனைய நிறுவன ரீதியான ஏற்பாடுகள் என்பனவற்றின் மேம்பாட்டில் அதிகளவு கவனம் செலுத்தியது. 1995 பெப்ரவரியில் செயற்பாட்டிற்கு வந்த 10, 20, 35 சதவீதங்களைக் கொண்ட மூன்று கட்ட தீர்வை முறையானது 1996இல் மாறாது நிலைத்திருந்தது. எனினும் புகையிலை வெறியக் குடிவகை, மசகெண்ணெய் மற்றும் சிலவகையான உந்துஊர்திகள் போன்ற இறக்குமதிகளின் சில வகைகள் தொடர்ந்தும் மூன்று கட்டமுறைக்கு வெளியே காணப்பட்டன.

இரண்டுகட்ட தீர்வைமுறைக்கு நகர்வது நடுத்தரகால குறிக்கோளாகக் காணப்பட்டது. சுங்க நடைமுறைகள், வர்த்தக உதவியளித்தல்

அட்டவணை **9.11**
நடைமுறைப்படுத்தப்படும் இறக்குமதித் தீர்வை சேகரிப்பு வீதம் (அ)

| விடயம் | 1994 | 1994 | 1994 |
|---|---|---|---|
| நுகர்வுப் பொருடகள் | 20.1 | 12.9 | 12.4 |
| உணவும் குடிபானமும் | 22.7 | 13.9 | 12.2 |
| அரிசி | 35.2 | 38.5 | 0.3 |
| மா | ... | 0.1 | 2.3 |
| சீனி | 19.7 | 14.6 | 15.9 |
| பாலும்பால் உற்பத்திகளும் | 14.5 | 11.5 | 11.5 |
| கருவாடு | 5.2 | 2.0 | 2.1 |
| ஏனைய மீன் உற்பத்திகள் | 5.5 | 4.6 | 4.2 |
| ஏனைய உணவுவிடயங்கள் | 37.4 | 18.7 | 19.0 |
| உணவு அல்லா நுகர்வுப் பொருட்கள் | 17.3 | 11.6 | 12.6 |
| உந்து ஊர்திகளும் ஈருளிகளும் | 24.1 | 21.7 | 24.3 |
| வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் | 6.1 | 6.9 | 12.1 |
| இறப்பர் டயர்களும் ரியூப்புக்களும் | 41.4 | 33.6 | 32.5 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் | 1.4 | 1.5 | 1.5 |
| ஏனைய உணவு அல்லாத விடயங்கள் | 18.2 | 11.1 | 10.6 |
| இடைநிலைப் பொருட்கள் | 8.0 | 9.1 | 8.2 |
| வளமாக்கி | 0.1 | - | - |
| மசகெண்ணெய் | 43.0 | 44.5 | 39.8 |
| ஏனைய பெற்றோலியப் பொருட்கள் | 18.7 | 23.4 | 24.7 |
| இரசாயன பொருட்களின் சேர்க்கை | 8.3 | 9.8 | 7.6 |
| சாயமுட்டல் பதனிடல் மற்றும் | 9.6 | 8.8 | 8.2 |
| தாள் தாள் அட்டைகள் | 10.1 | 9.8 | 6.9 |
| புடவையும் ஆடைகளும் | 0.9 | 1.0 | 1.1 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 8.5 | 9.2 | 5.7 |
| முதலீட்டுப் பொருட்கள் | 9.6 | 10.1 | 7.6 |
| கட்டடப் பொருட்கள் | 10.8 | 8.7 | 9.3 |
| போக்குவரத்துக் கருவிகள் | 14.6 | 21.6 | 18.9 |
| பொறியும் கருவியும் | 6.0 | 6.2 | 3.9 |
| ஏனைய முதவீட்டுப் பொருட்கள் | 15.0 | 10.1 | 6.7 |
| மொத்தம் | 10.9 | 10.1 | 8.8 |

(அ) இறக்குமதிப் பெறுமதியின் சதவீதமாக உண்மையான தீர்வைச் சேகரிப்பு　　　மூலம்: இலங்கைச் சுங்கம் (க.ஏ.பெ.)

திட்டங்கள் மற்றும் சுங்க மேற்பார்வையும் நிருவாகமும் உள்ளிட்ட நிறுவனரீதியான மீளமைத்தல் என்ப வற்றை ஆராயவும் அவற்றில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்களை விதந்துரைப்பதற்குமாக வர்த்தகம் மற்றும் தீர்வை ஆணைக்குழு ஒன்றினை 1997 வரவுசெலவுத் திட்டம் முன்மொழிந்தது.

தீர்வை விலக்குகள் மற்றும் விலக்களிப்புக்கள் என்பவற்றை தகாத முறையில் பயன்படுத்துவதை மிகக்குறைவான மட்டத்தில் பேணும்பொருட்டு 1997 வரவுசெலவுத் திட்டத்தில் பல நடவடிக்கைகள் முன்மொழியப்பட்டன. வசதிகளை தகாத முறையில் பயன்படுத்து பவர்கள், தவறிழைப்பவர்கள் மீது 3 மாத திறைசேரி உண்டியல் வீதத்திற்குச் சமமான தீர்வையொன்றை விதிப்பதென தீர்மானிக்கப்பட்டிருந்தது. நடைமுறைகளை மீளவொழுங்குபடுத்துவதற்காகவும் உள்ளூர்க் கைத்தொழில்களுக்கு ஆகக்குறைந்த பாதுகாப்பினை வழங்குவதற்காகவும் சுங்கக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 19இன்கீழ் நானாவிதப் பொருட்களாக கருதப்படுவனவற்றின் மீது ஆகக்குறைந்த 5 சதவீத தீர்வை விதிப்பதென முன்மொழியப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டினைப்போன்றே உடனடித் தீர்வை தளத்தல்களானது தேசிய நலனிற்கு அவசியமான பொருட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட சில முரண்பாடுகளை சரிப்படுத்தல் மற்றும் சில அத்தியாவசியப்பொருட்கள் மீதான சுங்கத் தீர்வைகளை நீக்குதல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு பொலியஸ்டர் , ஆர்க்லிக் அல்லது வினில், பொலிமர்ஸ் என்பனவற்றை அடிப்படையாகக்கொண்ட தீந்தைகள் மற்றும் மெருகூட்டிகள், கைக்குட்டைகள், முகம் சுத்தம் செய்யும் திசுக்களும் சால்வைகளும், ரேடியேட்டர்கள், சயிலன்சர்கள் மற்றும் வெளியேற்றக் குழாய்கள் என்பனவற்றின் மீதான தீர்வை வீதங்கள் 35 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்ட வேளையில் பால் மாவை பொதியில் அடைப்பதற்காக பயன் படுத்தப்படும் அலுமினியச் சுருள்கள், குறிப்பிட்ட சில வகையான டீசல் இயந்திரங்கள், தானியங்கி வடிகட்டுக்கள், ஆக்ககூறுகள் மற்றும் பொறியமைப்புக்கள் என்பனவற்றின் மீதான தீர்வைகள் 35 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டன. கடற்றொழில் உந்துவிசை இயந்திரங்கள் 4 சிலிண்டர்களைக் கொண்டதும் 3,250 இயந்திரக் கொள்ளவிற்கு மேலானதுமான டீசல் இயந்திரங்கள் மற்றும் இயந்திரங்கள் பொருத்தப்படாத பேருந்துகளுக்கான அடிச்சட்டங்கள் என்பனவற்றிற்கு தீர்வை விலக்குகள் வழங்கப்பட்டன. முன்னர் இவற்றிற்கு 10 சதவீதம் தீர்வை விதிக்கப்பட்டது.

தனியான மிதமான வீதமொன்றுடனான பொருட்கள் மற்றும் பணிகளின் வரியொன்றிற்கு சுமுகமாக மாறுவதனை வசதிப்படுத்தும் நோக்கில் 1996 நவம்பர் 6ஆம் நாள் நள்ளிரவிலிருந்து செயற்படும் வகையில் தற்போதைய

தாழ்வடைந்த வீத படிமுறைகளான 6 மற்றும் 10 சதவீதத்திலிருந்து முறையே 7 மற்றும் 11 சதவீதத்திற்கு மொத்த விற்பனைவரி அட்டவணையில் சீராக்கங்கள் மேற்கொள்ளப் பட்டன. அதேவேளை 6 சதவீதத்திலிருந்து சீனி, மண்ணெண்ணெய் மற்றும் டீசல் 20 சதவீதத்தலிருந்த தேயிலை மற்றும் தேங்காய்த் துருவல்களைப் பொதியிலடைப்பதற்காக பயன் படுத்தப்படும் கிராப்ட் உள் அட்டைகள் மற்றும் கிராப்ட் தாள் மற்றும் 10 சதவீதத்தலிருந்த தேயிலையை பெருமளவு பொதியிலடைப்பதற்காக பயன்படுத்தப்படும் அலுமினிய சுருள்கள் என்பன மொத்த விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப் பட்டதன் மூலமாக முரண்பாடுகளை சரிப் படுத்துவதற்காக குறிப்பிட்ட சில நட வடிக்கைகளும் கைக்கொள்ளப்பட்டன. 1995இல் 4.5 சதவீதத்திலிருந்து 2 சதவீதத்திற்குக் குறைக் கப்பட்ட பொறிகளினதும் கருவிகளினதும் இறக்குமதிகள் மீதான தேசிய பாதுகாப்பு தீர்வை 0.5 சதவீதத்திற்கு மேலும் குறைக்கப்பட்டது.

மோசமான நிலையிலுள்ள பழைய ஊர்திகள் தொடர்ந்து ஊர்தி உதிரிப் பாகங்ளுக்கான இறக்குமதிகளுக்கு அதிகளவிலான கேள்வியை ஏற்படுத்துவதனால் அவற்றின் இறக்குமதியினை ஊக்கமிழக்கச் செய்யும் நோக்கில் பாவிக்கப்பட்ட உந்து ஊர்திகளின் மீதான இறக்குமதித் தீர்வைகள் மற்றும் ஏனைய வரிகளின் கணக்கிடலிற்காக பயன்படுத்தப்படும் பெறு மானத் தேய்வு வீதத்தில் 5 சதவீதப்புள்ளி குறைப்பொன்றினைச் செய்வது பற்றி வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டது. 7 ஆண்டுகளுக்கு மேலாக பாவிக்கப்பட்ட ஊர்திகளுக்கான ஆகக் கூடிய பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்ட கப்பல் கட்டணம் உட்பட்ட விலைப்பெறுமானம் 30 சத வீதத்தில் நிர்ணயம் செய்யப்பட்டது. தற்போதுள்ள அட்டவணை யின்படி 9 ஆண்டுகளுக்கு பாவிக்கப்பட்ட ஊர்திகளுக்கான ஆகக்கூடிய பெறுமானத் தேய்வு படிப்படியாக 10 சதவீதம் வரைக்கும் வீழ்ச்சியுற்றது.

உயர்வடைந்து செல்லும் உணவு விலை களினால் ஏற்படும் பிரச்சினையை சமாளிப்ப தற்கானவொரு சலுகையாக 1996 ஏப்பிறல் 15 இலிருந்து எட்டரை மாதங்கள் கொண்ட காலப்பகுதியொன்றுக்கு அரிசி இறக்குமதிகள் மீதான தீர்வைகள் (35 சதவீதம்) முழுமையாகத் தளர்த்தப் பட்டன. 1996 யூன் 1 இலிருந்து 7 மாதங்கள் கொண்ட காலப்பகுதியொன்றுக்கு முழுமையான தீர்வை தளர்த்தல்கள் (10 சதவீதம்) வழங்கப்பட்டதன் மூலம் மின் உருவாக்கிகளின் இறக்குமதிகள் ஊக்கு விக்கப்பட்டன. உணவுக்காகப் பயன்படுத்தப்படும் எண்ணெயின் விலைகளை குறைவடையச் செய்வ தற்கும் மற்றும் தேஙகாயை மூலதாரமாகக் கொண்ட உற்பத்திகளின் உயர்வடைந்த பன்னாட்டு விலை களின் காரணத்தினால் உள்ளூர்க் கைத்தொழிலா ளர்களுக்கு உதவுவதற்குமென 1996 யூன் 12 இலிருந்து 7 மாதங்கள் கொண்ட காலப்பகுதி யொன்றுக்கு உணவிற்குப் பயன்படுத்தப்படும் எண்ணெய்கள் மற்றும் உலர்த்திய தேங்காய் என்பனவற்றின் இறக்குமதிகளின் மீது 30 சதவீதம் கொண்ட தீர்வைத் தளர்த்தலொன்று வழங்கப் பட்டது. புடவைகள் தயாரிப்பு கூனி இறால் மற்றும் கோழி வளர்ப்பு என்பனவற்றின் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான நிவாரண நடவடிக்கையாக நூல்இழை, கூனி இறால் மற்றும் கோழத்தீன் என்பனவற்றின் இறக்கு மதிகளின் மீதும் தளர்த்தல்கள் வழங்கப்பட்டன.

தீர்வை விதிக்கத்தக்க இறக்குமதிகளில், குறிப்பாக முதலீட்டுப் பொருட்களில் ஏற்பட்ட குறைப்புக்களைப் பிரதிபலித்து மொத்த இறக்கும திகளுக்கு இறக்குமதித்தீர்வை சேகரிப்பு விகிதமான பயன்தரு இறக்குமதித் தீர்வை வீதம் 1995இன் 10.1 சதவீதத்திலிருந்து 1996இல் 8.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. 1995 நவம்பரிலிருந்து இரத்தினக் கல் மற்றும் ஆபரணங்கள் உற்பத்தித் தொழி லுக்குப் பயன்படுத்தப்படும் பொறி மற்றும் கருவிகளின் இறக்குமதிகள் மீதான தீர்வைகள் முற்றாக நீக்கப்பட்டமை மற்றும் இவ்வாண்டில் இறக்குமதிச் செலவினத்தில் கணிசமான அதிகரிப்புக்களைக் காட்டிய மின் உருவாக்கிகள் மீதான தீர்வைகள் 1996 யூனிலிருந்து தளர்த்தப்பட்டமை என்பவற்றைத் தொடர்ந்து முதலீட்டுப் பொருட்கள் வகையில் பயன்தரு தீர்வை வீதம் கணிசமாக வீழ்ச்சியுற்றது. போக்குவரத்துக் கருவிகள் மீதான அதிகரித்த இறக்குமதிச் செலவினம் முக்கியமாக அரசு டமையாக்கப்பட்ட புகையிரத திணைக்களத்தின் இறக்குமதிகளால் ஏற்பட்டதெனினும் அவற்றின் இறக்குமதிகளின் மீது தீர்வை விதிக்கப்பட முடியாதாகையினால் போக்குவரத்துக் கருவிகள்

மீதான தீர்வை சேகரிப்பு வீழ்ச்சியைக் காட்டியது.

நுகர்வுப் பொருட்கள் வகையில் உணவு மற்றும் குடிபானம் என்பனவற்றின் இறக்குமதிக ளுக்கான பயன்தரு இறக்குமதித் தீர்வை வீதம் குறைவடைந்த வேளையில் உணவல்லாத நுகர்வு பொருட்கள் அதிகரிப்பினைக் காட்டின. உணவு மற்றும் குடிபான வகையின் பயன்தரு இறக்குமதி தீர்வை வீதத்தில் ஏற்பட்ட குறைப்பானது இவ்வாண்டில் எட்டரை மாதங்களாக 35 சதவீத முழுமையான தீர்வைத் தளர்தல்களை அனுபவித்த அரிசி இறக்குமதியில் முக்கியமாகப் பிரதிபலிக்கப்பட்டது. அரச அலுவலர்கள் ஊர்திகளை இறக்குமதி செய்வதற்காக தீர்வையற்ற சலுகை நீக்கப்பட்டதனைத் தொடர்ந்து உண வல்லாத நுகர்வுப் பொருட்கள் வகையினுள் உந்து ஊர்திகள் மற்றும் உந்து ஈருருளிகள் என்பனவற்றின் பயன்தரு இறக்குமதித் தீர்வை வீதம் அதிகரிப்பொன்றினைக் காட்டியது.

இடைநிலைப்பொருட்களைப் பொறுத்த மட்டில் அச்சடித்தல், மீன்பிடித்தல், மரப்பொருட் கள், படச்சுருள் மற்றும் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் போன்ற கைத்தொழில் முயற்சிக ளுக்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களுக்கு 1996 வரவு செலவுத்திட்டத்தில் வழங்கப்பட்ட தீர்வைக் குறைப்புக்கள் குறைவடைந்த பயன்தரு தீர்வை வீதங்களில் பிரதிபலிக்கப்பட்டன.

1996இல் ஏற்றுமதித்துறை தொடர்ந்தும் பெறுமான விகித விற்பனை வரிகள் மற்றும் தீர்வைகள் என்பனவற்றிலிருந்து நீக்கப்பட்டிருந்த வேளையில் சில விடயங்கள் மீதான ஏற்றுமதித் தீர்வைகளும் உரிமக் கொடுப்பனவுகளும் நீக்கப்படாதிருந்தன.

## புடவைகளினதும் ஆடைகளினதும் அனுமதிப் பங்கு ஒதுக்கீடு

1995இல் அறிமுகப்படுத்தப்பட்ட செயலாற்றத்தின் அடிப்படையிலான அனுமதிப் பங்கு ஒதுக்கீடு முறை 1996இலும் தொடர்ந்ததுடன் புடவை மற்றும் ஆடைத் தயாரிப்பாளர்கள் பொதுவாக இம்முறையில் திருப்தியடைந் துள்ளதாகத் தோன்றுகின்றது. 1996இல் அனுமதிப்பங்கு ஒதுக் கீட்டில் பாரிய மாற்றங்கள் எதுவும் காணப்படவில்லை. பொதுவான குழாமிற்கு இடப்பட்ட அனுமதிப்பங்குகளின் ஒதுக்கீட்டின்போது புதிய ஏற்றுமதியாளர்களுக்கும் ஏற்கனவேயுள்ள தமது இயலளவினை விரிவு படுத்திக்கொண்ட ஏற்றுமதியாளர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டது. 1995இன் 6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் அனுமதிப் பங்குக் கிடைப்பனவு 1996இல் பொதுவாக 10 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்தது.

## ஏற்றுமதியாளர்களுக்கான ஊக்குவிப்புக்கள்

தீர்வைத் தள்ளுபடித் திட்டம், ஏற்றுமதி உள்ளீட்டுப் பொருட்களுக்கான இறக்குமதித் தீர்வை விலக்களிப்புத் திட்டம், சுங்கப் பிணையிடும் திட்டம் மற்றும் இறைத் தீர்வைகளின் விலக்களிப்பு ஆகிய ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் நோக்கினைக் கொண்ட பல ஊக்குவிப்புத் திட்டங்கள் 1996இலும் தொடர்ந்து தொழிற்பாட்டிலிருந்தன. தற் போதைய சிக்கலான நடைமுறைகளைத் தவிர்ப் பதன் மூலமாக நிர்வாக ரீதியான தாமதங்களை அகற்றும் நோக்கில் 1997 சனவரியிலிருந்து செயற்படும் வகையில் இத்திட்டங்களை நிதியமைச்சும், சுங்கத் திணைக்களமும் நேரடி யாக நடைமுறைப்படுத்த வேண்டுமென 1997 வரவு செலவுத்திட்டம் முன்மொழிந்தது.

சிறிய நடுத்தர அளவு ஏற்றுமதிக் கைத் தொழில்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல் மற்றும் பன்னாட்டு போட்டித்தன்மையை உயர்த் துதல் என்பனவற்றினை நோக்கமாகக் கொண்டு தமது உற்பத்தியில் 90 சதவீதத்திற்கும் மேலான வற்றை ஏற்றுமதி செய்யும் ஏற்றுமதியாளர்களுக்கு தற்போது கிடைக்ககூடியதாகவுள்ள நடை முறையிலுள்ள மூலதன மற்றும் இடைநிலைப் பொருட்கள் மீதான தீர்வை மற்றும் வரி என்பனவற்றின் விலக்களிப்புக்கள் திட்டத் திலிருந்து சிறிய மற்றும் நடுத்தர அளவு ஏற்றுமதியாளர்களும் பயன்பெறுவதற்கு சந்தர்ப்ப மொன்றினை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தமது மொத்த உற்பத்தியில் 50 சதவீதத்திற்கும் மேலான வற்றை ஏற்றுமதி செய்யும் ஏற்றுமதியாளர்களுக்கு மூலதனம் மற்றும் இடைநிலைப் பொருட்கள் மீதான தீர்வை மற்றும் வரிகள் என்பனவற்றிற்கு 100 சதவீதம் விலக்களிப்பும் 25 சதவீதத்திற்கும் 50 சதவீதத் திற்கும் இடைப்பட்ட உற்பத்திகளை ஏற்றுமதி

செய்வோருக்கு 50 சதவீதம் விலக்களிப்பும் வழங்கப்பட்டன.

வட்டி வீதங்களைக் குறைத்து தனியார் துறைக்கு அதிகளவிலான நிதிகள் கிடைக்கச் செய்வதனை நோக்கமாகக் கொண்டு 1997 வரவு செலவுத்திட்டத்தில் செய்யப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து தமது தொழிற்படு மூலதனம் மற்றும் நிலையான மூலதன தேவைப்பாடுகள் என்பன வற்றை ஈடுசெய்வதற்கு போதியளவான வெளிநாட்டு நாணயங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஏற்றுமதி யாளர்களுக்கு வர்த்தக வங்கிகள் அவற்றின் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் அலகுகள் மற்றும் உள்ளூர் வங்கித்தொழில் அலகுகள் என்பவற் றில் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதிகளிலிருந்து வெளிநாட்டு நாணயக் கடன்கள் வழங்குவதை அனுமதிப்பதற்கான திட்டமொன்று மத்திய வங்கியினால் தீட்டப்பட்டது. ஏற்றுமதியாளர் களுக்கு வழங்கல் செய்யப்படும் துணைப் பொருட்களைத் தயாரிப்பதற்கு தேவைப்படும் தமது இறக்குமதிகளை நிதியிடுவதற்காக வெளிநாட்டு நாணயக் கடன் களைப் பெறுவதற்கு செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் அனுமதிக் கப்பட்ட நேரடியல்லாத ஏற்றும தியாளர்களும் தகைமை பெற்றிருந்தார்கள். 1997 சனவரி 30 இல் வங்கிகளுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத் தல்கள் வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து இத்திட்டம் பயனுறுவதாக மாறியது.

இறக்குமதி செய்யும் நாடுகளின் உயர்ந்த இறக்குமதித் தீர்வைகளால் பாதுகாக்கப்பட்டுள்ள உற்பத்திப் பொருட்களுடன் போட்டித் தன்மை யினைக் கொண்டிருக்கவேண்டிய மரபு வழிய ல்லா விவசாய உற்பத்திப் பொருட்களின் ஏற்று மதியாளர்களுக்கு நிவாரணங்களை வழங்குகின்ற வேளையில் அதியுயர் வான்வழிப் பொருட் கொண்டு செல்லல் கட்டணங்களின் பளுவினைக் குறைப்பதற்காக இலைச்செடிகள், பறித்த பூக்கள், பழ வர்க்கங்கள், மரக்கறி வகைகள் என்பன வற்றிற்காக எயர் லங்காவினால் குறிப்பீடு செய்யப்பட்ட வான்வழிப் பொருட்கொண்டு செல்லல் கட்டணங்களுக்கு 100 சதவீத தள்ளுபடி வழங்கப்பட்டது.

## ஏற்றுமதியாளர்களுக்கான நிறுவன ரீதியான உதவிகள்

1996இல் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது ஏற்றுமதிகளின் அபிவிருத்திகளுடன் இணைந்ததான பல்வேறு நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டிருந்தது. ஏற்றுமதி சார்ந்த சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிக ளுக்கு சந்தைகள், உற்பத்திப் பொருட்களின் மேம்படுத்தல் மற்றும் ஆலோசனை உதவிகள் போன்ற உதவிகளை வழங்கும் நோக்கில் 1996இல் தெற்கு, மத்திய மற்றும் வடமேற்கு மாகாணங்களில் மூன்று மாகாண அலுவலகங்களை இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை நிறுவியது. ஏற்றுமதிக் கான உற்பத்திக் கிராமக் கூட்டு நிலையங்களையும் உள்ளடக்கிய மரபுவழியல்லா ஏற்றுமதித்துறையின் சிறிய மற்றும் பெரிய அளவிலான ஏற்றுமதி சார்ந்த செயற்றிட்டங்களுக்கும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை நிதி உதவிகளை உள்ளடக்கிய பொதியொன்றின் மூலமாக தொடர்ந்தும் உதவியளித்தது. உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் ஆபரணங்கள், ஆடைகள், தோல் மற்றும் இறப்பர் உற்பத்திப் பொருட்கள், பறித்த பூக்கள் மற்றும் கைவினைப் பொருட்களை உள்ளடக்கிய பலதரப்பட்ட பொருட்களுக்காக குறித்துரைக் கப்பட்ட உற்பத்தி பொருட்களுக்கான பல வர்த்தக சந்தைகள், பொது வர்த்தக சந்தைகள், வாணிப கூட்டங்கள் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றில் பங்கேற்பினை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஒழுங்கு செய்தது. தொழில் நுட்ப உதவிகளை வழங்குதல் உற்பத்திப் பொருளின் மேம்பாட்டினை உயர்த்துதல் மற்றும் சந்தை தேவைப்பாடுகளைப் பற்றி கல்வியூட்டல் என்பனவற்றை நோக்கமாகக் கொண்டு குறிப்பிட்ட உற்பத்திப் பொருட்களுக்கான பல கருத் தரங்குகள் / செயலமர்வுகள் மற்றும் இறக்குமதி ஏற்றுமதி நடைமுறைகள் பற்றிய பொது நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன ஆய்விற்குட்பட்ட காலப் பகுதியில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் நடாத்தப்பட்டன.

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது தற்பொழுது 45 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட தீர்வைகளையுடைய அனைத்து

இறக்குமதிகளின் மீது விதிக்கப்படும் சிறப்புத் தீர்வையினால் நிதியிடப்படுகின்றது. எனினும், 1995 பெப்ரவரியிலிருந்து மூன்று படிமுறை கொண்ட தீர்வை முறையொன்று அறிமுகப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து 45 சதவீதத்தில் இருந்த பல பொருட்களுக்கான தீர்வை வீதங்கள் 35 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டன. எனவே ஒரு சில பொருட்கள் மட்டுமே தற்பொழுது ஏற்றுமதி அபிவிருத்திச்சபை தீர்வையின் கீழ் காணப்படுவதானது ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் நடவடிக்கைகளுக்கான நிதிகளின் கிடைப்பனவை குறிப்பிடத்தக்களவு குறைவடையச் செய்துள்ளது. இறக்குமதித் தீர்வையானது தீர்வை அமைப்பின் திரிபொன்றாகும். அது வரி அமைப்பினைச் சீராக்கல் மற்றும் திரிபுகளை இல்லாதொழித்தல் ஆகிய தற்போதைய அரசின் முயற்சிகளுக்கு முரணானதாகும். இந்நிதிக் கட்டுப்பாடுகளின் நோக்கில் சுய நிதியீட்டு அடிப்ப டையில் அதனது பணிகளை வழங்குவதற்கு இயலச் செய்யும் வகையில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பங்கு கவனமாக மீளாய்வு செய்யப்படல் வேண்டும்.

இலங்கை ஏற்றுமதி கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இலங்கையின் ஏற்றுமதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ஏற்றுமதி கொடுகடன் காப்புறுதி மற்றும் உத்தரவாதங்கள் போன்ற ஆதாதரப் பணிகளை தொடர்ந்தும் வழங்கியது. 1996இல் இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் காப்புறுதிப் பத்திரங்களின் உடமையாளர்களின் எண்ணிக்கை 188 ஆக காணப்பட்ட வேளையில் ரூ. 25,320 இலட்சம் பெறுமானம் கொண்ட 1,216 உத்தர வாதங்கள் வழங்கப்பட்டதற்கும் மேலாக பத்திரங் களின் ஆகக்கூடிய பொறுப்பு ரூ. 10,750 இலட்சமாக விளங்கியது. எனினும் 1996 முற்பகுதியில் கொழும்பின் நிதி மாவட்டத்தில் ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பங்களினாலும் வரட்சி, மின்சாரத் தட்டுப்பாடு மற்றும் குறிப்பிட்ட சில கைத்தொழில் முயற்சிகளில் ஏற்பட்ட தொழிலாளர் அமைதியின்மை என்பன காரணமாகவும் இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வாணிப நடிவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. ஏற்றுமதி யாளர்களுக்கு காப்புறுதிப் பத்திரங்களை வழங்கும் செயல் முறையில் கொள்வனவாளர்களின் நம்பகத் தன்மை பற்றி பத்திரங்களின் உடமை யாளர்களுக்கு இலங்கை ஏற்றுமதிக் கொடு கடன் காப்புறுதிக்கூட்டுத்தாபனம் அறிவுரை வழங்கி யதுடன் ஏற்றுமதியாளர்கள் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு தேவையான தொழில்பாட்டு மூலதனத்தையும் வழங்கி உதவியது. அத்துடன் "தற்காலிக அனுமதி வழங்கல்" முறையின் கீழ் நேரடி உத்தர வாதங்களை வழங்குவதன் மூலமாக வெளிநாட்டு வர்த்தகச் சந்தைகள் மற்றும் கண் காட்சிகளில் பங்குபற்றும் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களின் ஏற்றுமதியாளர்களுக்கு இலங்கை ஏற்றுமதி கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத் தாபனம் தொடர்ந்தும் அதன் உதவிகளை வழங்கியது. இத்திட்டத்தின்கீழ் வெளிநாட்டு கண்காட்சிகளுக்கான தீர்வையற்ற அனுமதி யினை வழங்கும் எத்தகைய பிணைப்பொறுப்பும் இன்றி பன்னாட்டு வர்த்தக சம்மேளனத்தின் இலங்கை தேசிய மன்றத்தி னால் வழங்கப்படும் தற்காலிக அனுமதிப்பத்திரமான பொதுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்றுமதியாளர்களுக்கு உதவி வழங்கப்பட்டது. ஏற்றுமதியாளர்கள், ஏற்றுமதி சாத்தியம் கொண்ட ஏற்றுமதியாளர்கள் மற்றும் வங்கி அலுவலர்கள் ஆகியோருக்கு ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதி மற்றும் ஏற்றுமதிகளுக்கான வங்கி நிதியிடல் என்பனவற்றில் கல்வியறிவூட்டுவதற்காக இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி என்பனவற்றின் ஆதரவுடன் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் இணைந்து தொடர்ச்சியான பல மாகாண செயலமர்வுகளை இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நடாத்தியது.

## கப்பற்கட்டண வீதங்கள்

கப்பலேற்றும் வர்த்தகம் தாராளமயமாக்கப் பட்டதன் விளைவாக கப்பலேற்றும் நிறுவனங்களுக் கிடையே உருவான அதிகரித்த போட்டி கல உரிமையற்ற பொதுவான கலங்களில் பொருள் கொண்டு செல்லல் முறையின் தோற்றத்தின் காரணமாக 1996இல் மேலும் கடுமையடைந்ததுடன், பல கடல் மார்க்கங் களுக்கான கப்பல் கட்டணங்களை 1996,இல் மேலும் கீழ்நோக்கி நகரச் செய்தது. ஐக்கிய இராச்சியம், வடகண்டம், மத்திய தரைக்கடல், பிரான்சு, எகிப்து, சிரியா போன்ற கடல் மார்க்கங்க ளுக்கு கப்பலேற்றப்பட்ட அனைத்து பண்டங்க

ளுக்குமான சராசரி கப்பல் கட்டண வீதங்கள் 1996இல் குறைவடைந்த வேளையில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் கிழக்கு கனடா என்பனவற்றிற்கான கப்பல் கட்டண வீதங்கள் மாற்றமின்றியிருந்தன. ஐக்கிய இராச்சிய மற்றும் வட கண்டத்திற்கான கட்டணம் 17 சதவீதத்தினாலும் மத்தியதரைக்கடல் பகுதிக்கான கட்டணம் 22 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றன. எனினும் பாகிஸ்தானுக்கு கப்பலேற்றப்பட்ட அனைத்து பொருட்களுக்குமான கப்பல் கட்டணம் 1996இல் 11 சதவீதத்தினால் அதிகரித்தது. பல பாரிய கப்பலேற்றும் நிறுவனங்கள் அவற்றின் கப்பற்கட்டண முறையை பண்ட அடிப் படையிலான முறையிலிருந்து அனைத்து வகைக் கப்பற்கட்டண முறைக்கு மாற்றி யமைத்தமையும் கப்பல் கட்டண வீதங்களில் காணப்பட்ட குறைவடைந்துசெல்லும் போக்கிற் கான மற்றுமொரு காரணமாகும். அவுஸ் திரேலியா, துபாய், ஜித்தா, ஜோர்டான் ஆகிய நாடுகளின் கடல் மார்க்கங்களை உள்ளடக்கிய கப்ப லேற்றும் நிறுவனங்கள் 1996இல் அவற்றின் கப்பற் கட்டண முறையை அனைத்துவகை கப்பற்கட்டண முறைக்கு மாற்றியமைத்தன. இதன்விளைவாக ஜித்தா தவிர்ந்த கடல் மார்க்கங்களுக்கு கப்பலேற்றும் பல பண்டங்க ளுக்கான கப்பற் கட்டண வீதங்கள் 1996இல் வீழ்ச்சியடைந்தன. ஜித்தாவுக்கு கப்பலேற்றப் படும் தும்புகளுக்கான கப்பற் கட்டணம் 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் ஏனைய அனைத்து பண்டங்களுக்குமான கப்பற் கட்டணங் கள் மாற்றமின்றி இருந்தன. யப்பான், சிங்கப்பூர் ஆகிய தூரகிழக்கு கடல் மார்க்கங்க ளுக்கான கப்பற்கட்டணங்களும் 1996இல் வீழ்ச்சியுற்றன.

## 9.12 வர்த்தக உறவுகள், வர்த்தகப் படுத்தல் ஒழுங்குகள் மற்றும் தீர்ப்பனவு ஒழுங்குகள்

எஞ்சியிருக்கும் சில வர்த்தக தடைகளை இல்லாததொழிப்பதன் மூலமாக பாரிய தாராள மயமாக்கலை நோக்கி அதன் வர்த்தக கொள்கை வழிப்படுத்தல்களை இலங்கை தொடர்ந்தும் மேற் கொண்டது. இவ்வாண்டில் வோல் ஸ்ரீட் சஞ்சிகையின் ஆதரவுடன் உலக மரபுரிமை மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தென் ஆசிய பிராந்தியத்திலேயே மிகவும் தாராள மயமான பொருளாதார மாக இலங்கையை நிரல்படுத்தியதில் இப்பெறுபேறுகள் பிரதிபலிக்கப்படுகின்றது.

உலக வர்த்தக அமைப்பின் ஆரம்ப உறுப்பினர் என்ற வகையில் உலக வர்த்தக அமைப்பிற்கான அதன் குறுங்கால மற்றும் நடுத்தரகால கடப்பாடுகளை நிறைவேற்று வதற்கான நடவடிக்கைகளை இலங்கை 1996இல் ஆரம்பித்தது. இச்செயல்முறைகளை வசதிப் படுத்தும் நோக்கில் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக, வாணிப, உணவு அமைச்சு அமைச்சர்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு குழுவொன்றை உருவாக்கியது. இலங்கை யின் சட்டங்கள் ஒழுங்குவிதிகள் மற்றும் நிர்வாக ரீதியான நடைமுறைகள் என்பன பலதார இருதார மற்றும் பிராந்திய உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கையின் கடப்பாடு களுக்கு இணங்கியதாக இருப்பதை உறுதி செய்வதற்கான முயற்சிகளை ஒருங்கிணைப்ப தற்காக இக்குழு ஒழுங்காக சந்திக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. அத்துடன் இவ்வுடன் படிக்கைகளின் வரம்பிற்குட்பட்டதாக எடுக் கப்படும் விடயங்கள் தொடர்பில் இலங்கை யினால் கைக்கொள்ளப்படவேண்டிய பிரத்தியேக மான நிலையை தெளிவாக தீர்மானித்துக்கொள்வ தற்கான கலந்தாலோசனையிலும் இக்குழு ஈடுபடும். இவ்வுடன்படிக்கைகளின் பலதரப்பட்ட பண்புகளை நிர்ணயிப்பதற்காக அமைச்சர் களுக்கிடையிலான ஒருங்கிணைப்புக்குழு பத்து உபகுழுக்களை உருவாக் கியுள்ளது. ஒவ்வொரு துணைக்குழுவும் பொருத்த மானவொரு அரச நிறுவனத்தின் பிரதிநிதியால் தலைமை தாங்கப் படுவதுடன் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை என்பன வற்றின் பிரதிநிதிகளும் இவ்வுபகுழுக்களில் உள்ளடக் கப்பட்டுள்ளார்கள். சம்பந்தப்பட்ட உடன்படிக்கை களினால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய உத்தேச அனுகூலங்கள் பிரதிகூலங்கள் பற்றி இத்துணைக் குழுக்கள் ஆய்வுசெய்யுமென எதிர்பார்க்கப் படுவதுடன், உரிய அதிகார மேலாண்மை களுக்கு அறிவித்தல்கள் அனுப்பியதன் மூலம் இலங்கையின் கடப்பாடுகளை சில குழுக்கள் ஏற்கனவே நிறைவேற்றியுள்ளன. உலக வர்த்தக அமைப்பு உடன்படிக்கைக்கு இசைவாக அவசி

யமான தேசிய சட்டவாக்கங்களை இயற்றுவதற்கு வசதியளிப்பதற்கான வழிகாட்டுதல்களை தயாரிப்பதற்கான செயல்முறையிலும் இத் துணைக் குழுக்கள் ஈடுபட்டுள்ளன. 1996 திசெம்பரில் சிங்கப்பூரில் நடைபெற்ற உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் மட்டத்திலான முதலாவது சந்திப்பில் இலங்கையினால் எடுக்கப்பட்ட நிலையானது இத்துணைக் குழுக்களினாலேயே விருத்தி செய்யப்பட்டது. தொழிலாளர் தரங்கள், முதலீடு போட்டி மற்றும் அரசின் கொள்வனவு ஆகிய முக்கியமான விடயங் களை உள்ளடக்கியிருந்தமையால் கூட்ட நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்ட சில விடயங்கள் இலங்கைக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

புடவைகள் மற்றும் ஆடைகள் உடன்படிக்கையின் கீழ் நிறுவப்பட்ட உலக வர்த்தக அமைப்பின் புடவை கண்காணிப்புச் சபைக்கு பொருட்களின் பட்டியலொன்றை சமர்ப்பித்ததன் மூலம் பல் நூலிழை ஒப்பந்தத்தினை கட்டங்களில் அகற்றும் நடவடிக்கை முறையின் கட்டம் 1 இன் கீழான அதனது கடப்பாடுகளை இலங்கை 1996இல் நிறைவேற்றியது. புடவைக் கண்காணிப்புச் சபை யினால் கேட்டுக்கொள்ளப் பட்டதற்கு இணங்க 1998இல் அடுத்த கட்டத்தின்கீழ் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய பொருட்களை இனங்கண்டு இரண்டாவது பட்டியலொன்றையும் இலங்கை சமர்ப்பித்தது. சிறந்த பயன்பாட்டினை எய்துவதன் மூலம் அதியுயர் ஏற்றுமதி வருமானங்களைப் பெற்றுக்கொள்வதற்காக புடவை அனுமதிப்பங்கு களை ஒதுக்கீடு செய்யும் பொறுப்பு முகவ ராண்மைகளிடையேயான குறிப்பிட்ட ஒரு விடயத்திற்கான குழுவாகவே புடவை அனுமதிப் பங்குச்சபை ஆரம்பத்தில் நிறுவப்பட்டது. எனினும் கடந்த காலத்தில் அனுமதிப்பங்கு ஒதுக்கீடு தொடர்பாக எழுப்பப்பட்ட பல்வேறு விமர்சனங்களுக்கும் பதிலளிக்கும் பொருட்டு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு மீளாய்வுக் குழுவொன்றை நியமித்தது. இக்குழுவின் விதந்துரைப்புக்களுக்கமைய புடவை அனுமதிப் பங்கு சபை 1996இன் புடவை அனுமதிப் பங்குச்சபை சட்டத்தினால் சட்ட ரீதியானதொரு சபையாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதன்படி புடவை அனுமதிப்பங்குச் சபை அலுவல்சார்ந்த ஐந்து அங்கத்தவர்களையும் மற்றும் இத்தொழில் துறையுடன் சம்பந்தப்பட்ட சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய ஐவரையும் உள்ளடக்கியிருக்கும்.

பொருட்களின் உள்ளடக்கத்தினை பரவலாக் குவதும் துணைத்தீர்வை, தீர்வையற்ற தடைகள் என்பவற்றை அகற்றுவதற்குமாக தெற்காசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளின் இரண்டாம் சுற்று வர்த்தக பேச்சுவார்த்தைகள் இவ்வாண்டில் நடாத்தபபட்டன. இரண்டாம் சுற்று வர்த்தகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்னெடுத்துச் செல்வதற்குமென கொழும்பில் மார்ச்சில் நடைபெற்ற முதலாவது கூட்டத்தினை இலங்கை பொறுப்பேற்று நடாத்தியது. இவ்விரண்டாம் சுற்று சந்திப்பினைத் தொடர்ந்து மற்றுமொரு சந்திப்பு செப்டம்பரில் இஸ்லாமாபாத்தில் இடம்பெற்றதுடன் நவம்பரில் காத்மண்டுவில் முடிவடைந்தது. 1996 திசம்பரில் புதுதில்லியில் நடைபெற்ற சார்க் அமைச்சர்கள் பேரவையின் 17ஆவது கூட்டத்தொடரில் இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் தொடர் பான அறிக்கை மற்றும் தேசிய சலுகைகள் பட்டியல்கள் என்பன அங்கீகரிக்கப்பட்டன. சலுகைகளுக்கு விண்ணப்பிப்பதற்கான ஒழுங்குமுறைகள் 1997 மார்ச்சிற்கு முன்னதாக முடிவுறுத்திக் கொள்ள வேணடுமென தீர்மானமொன்று எடுக்கப்பட்டது.

இலங்கைக்கு அனுகூலமான 67 ஏற்றுமதிப் பொருட்களுக்கான நேரடி சலுகைகளை இரண்டாம் சுற்று வர்த்தக பேச்சுவார்த்தைகளில் இலங்கை பெற்றுக்கொண்டது. இது இந்தியாவிலிருந்து 22 பொருட்களுக்கும், நேபாளத்திலிருந்து 14 பொருட்களுக்கும், மாலைதீவிலிருந்து 2 பொருட்களுக்கும், பங்களாதேசத்திலிருந்து 5 பொருட்களுக்கும் மற்றும் பூட்டானிலிருந்து 3 பொருட்களுக்கும் பெறப்பட்ட தீர்வையல்லாத தடைகளற்ற சலுகையடிப்படையிலான தீர்வை வீதங்களை உள்ளடக்கியுள்ளது. எனினும் பாகிஸ்தானிலுள்ள தீர்வைச் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ள 21 பொருட்களின் மீதும் தீர்வையல்லாத தடைகள் பிரயோகிக்கத்தக்கதாகும். இதற்குமேல் குறைந்த அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கான சிறப்பு ஏற்பாடுகள் தவிர்ந்த மிகவும் முன்னுரிமையளிக்கப்பட்ட நாடு என்ற ரீதியிலான ஏற்பாட்டின் அடிப்படையிலமைந்த ஏனைய ஒவ்வொரு உறுப்பு நாடுகளுக்கும்

அனைத்து ஏழு உறுப்பு நாடுகளினாலும் 1,700 இற்கும் மேற்பட்ட பொருட்களுக்கு தீர்வைச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

உலகளாவிய வர்த்தக முன்னுரிமைகள் முறைமையின் கீழான இரண்டாம் சுற்று வர்த்தக பேச்சுவார்த்தைகள் நவம்பரில் இடம்பெற்றன. ஜெனிவாவிலுள்ள இலங்கை தூதுக்குழு இப்பேச்சு வார்த்தைகளில் பங்குபற்றியது. உடன்படிக்கையில் நிலைமையொன்றினைப் பெற்றுகொள்ளுதல் ஒவ்வொரு உற்பத்திப்பொருள் தொடர்பான கலந்துரையாடல்கள், அனைத்து வகைகளையும் உள்ளடக்கிய தீர்வைக் கலந்துரையாடல்கள் மற்றும் வர்த்தக வழிமுறைகள் என்பவற்றைக் கையாளும் நான்கு கலந்துரையாடல் குழுக்களினால் இச்சுற்று பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டது. அவற்றினது அதிகாரத்திற்குள் வரும் விடயங்கள் தொடர்பான முடிவுக ளெடுப்பதற்காக இந்நான்கு தொகுதியினரும் பல கூட்டங்களை நடாத்தினார்கள். அநேகமான அங்கத்தவர்கள் பொதுவான மட்டத்திலான தீர்வைக் குறைப்புக்கள் மற்றும் நேரடி வர்த்தக நடவடிக்கைகள் என்பனவற்றில் குறைந்தளவு ஆர்வமே செலுத்தினார்கள். இதன்விளைவாக ஒவ்வொரு பொருள் தொடர்பாகவும், பேச்சு வார்த்தையில் ஈடுபடுபவதினூடாக முக்கியமான தீர்வைச் சலுகைகளை பரிமாறிக் கொள்வதுடன் மட்டுப்படுத்தப்பட்ட சில மிதமான பெறு பேறுகளுடன் இச்சுற்று முடிவடைந்தது.

பாங்கொக் உடன்படிக்கையின் ஏனைய உறுப்பினர்களிடமிருந்து இலங்கை தொடர்ந்தும் முன்னுரிமை வசதிகளைப் பெற்றுவருகின்றது. (வங்காளதேசம், இந்தியா, லாவோஸ், பப்புவா நியூகினியா மற்றும் கொறியக் குடியரசு) 1996இல் மக்கள் சீனக்குடியரசு உடன்படிக்கையில் சேர்வதற்காக விண்ணப்பித்ததுடன் இது உறுப்பு நாடுகளினால் பரிசீலனைக்கும் உட்படுத்தப் பட்டிருந்தது. ஏனைய உறுப்பினர்களுடன் சேர்ந்து இலங்கையும் குறிப்பிட்ட சில ஏற்றுமதிப் பொருட்களுக்கு தீர்வைச் சலுகைகளைக் கோரி சீனாவிடம் அதன் வேண்டு கோள் பட்டியலைச் சமர்ப்பித்தது. பாங்கொக் உடன்படிக்கையில் சீனாவையும் சேர்த்துக் கொள்வது தொடர்பாக தீர்மானிப்பதற்காக 1997இன் முன்னரைப் பகுதியில் கூட்டமொன்றை நடாத்து வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. சீனாவின் உறுப்புரி மையானது பிராந்திய வர்த்தகப்படுத்தலுக்கான ஒழுங்குகளைப் பலப்படுத்தும் என்பதே உறுப்பினர்களின் கருத்தாகும்.

1995 திசம்பரில் செயற்பாட்டிற்கு வந்த பன்னாட்டு இயற்கை இறப்பர் உடன்படிக்கை III 1996இலும் தொடர்ந்து செயற்பாட்டிலிருந்தது. பண்டங்களுக்கான ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கேள்வி மற்றும் வழங்கல்களுக்கி டையே ஒரு சமமான வளர்ச்சியினை எய்துவதற் கான நோக்கில் இயற்கை இறப்பர் விலைகளை உறுதி நிலைப்படுத்தும் குறிக்கோள்களுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடப்பட்ட பல உடன்படிக்கைகளில் இது மூன்றாவதாகும். பன்னாட்டு இயற்கை இறப்பர் உடன்படிக்கை III இற்கும் முன்னைய உடன்படிக்கைக்கும் இடையேயுள்ள முக்கிய வேறு பாடு எதுவெனில் தற்போதைய உடன்படிக்கை சந்தைப் போக்குகளிற்கு சமீபமாக தொழிற்படும் என்பதாகும். பன்னாட்டு கோப்பி சபையினால் ஏற்றுமதி அனுமதிப்பங்கு வழங்கும் முறை முன்னர் இரத்துச் செய்யப்பட்டிருந்தமையினால் பன்னாட்டு கோப்பி உடன்படிக்கையில் சேர்வதில்லை என இலங்கை தீர்மானித்தது. இம்முடிவு பன்னாட்டு கோப்பிச் சபைக்கு தெரியப்படுத்தப்பட்டது. இவ்வறிவித்தலின் விளைவாக இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கோப்பியை உள்ளடக்கி சான்றிதழ் வழங்குவதனை இலங்கை நிறுத்திக்கொண்டது.

அனைத்து உலக நாடுகளுடனான இலங்கையின் இருபக்க வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு என்பன 1996இல் குறிப்பிடத்தக்களவு மேம்பாடடைந்தன. பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான இலங்கை ஈரான் கூட்டு ஆணைக்குழுவின் நான்காவது கூட்டத்தொடர் டெகரானில் நடைபெற்றது. இருநாடுகளுக்குமிடையிலான வர்த்தக சமனின்மையை குறைப்பதற்காக கூட்டுமுயற்சிகளை நிறுவுவதற்கு ஈரான் இக்கூட்டத்தில் முறையாக ஒப்புக்கொண்டது.

இலங்கைக்கும் எகிப்திற்கும் இடையில் ஏற்கனவேயிருந்த வர்த்தகம் மீதான கூட்டுக்குழு கூட்டு ஆணைக்குழு மட்டத்திற்கு தரமுயர்த்தப் பட்டது. இவ்வாணைக்குழுவின் முதலாவது கூட்டத்தொடர் கெயிரோவில் நடைபெற்றதுடன் இலங்கையால் முன்மொழியப்பட்டவாறு கூட்டு

முயற்சிகளை இலங்கையில் நிறுவுவதற்கு எகிப்தும் முறையாக ஒப்புக் கொண்டது.

வர்த்தகம் மற்றும் பொருளாதார தொழில் நுட்ப ஒத்துழைப்பு மீதான இலங்கை - சீனா கூட்டு ஆணைக்குழுவின் இரண்டாவது கூட்டத்தொடர் 1996இல் பீக்கிங்கில் நடைபெற்றது. கூட்டு ஆணைக் குழுவின் இக்கூட்டத்தொடரில் மிகவும் குறிப்பிடத்தக்க பெறுபேறு யாதெனில் இலங்கையில் நிறுவவுள்ள கூட்டு முயற்சி களுக்கான குறிப்பிடப்பட்ட துறையை (பென்சில் கள் தயாரிப்பு, அரிசித் தவிடு எண்ணெய் மற்றும் ஆழ்கடல் மீன்பிடித்தல்) இனங்கண்டு கொண்டதாகும்.

குவைத் மற்றும் சைப்பிரஸ் என்பனவற்று டனான இருதரப்பு வர்த்தக உடன்படிக்கைகளை இலங்கை 1996இல் உறுதிப்படுத்திக் கொண்டது. தாய்லாந்து மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளுடனும் இலங்கை வர்த்தக உடன் படிக்கைகளை கைச்சாத்திட்டது.

உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக வாணிப மற்றும் உணவு அமைச்சினால் முன்மொழியப் பட்டவாறு பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்யும் நாடுகளுடனான வர்த்தக உறவுகளை அதிகரிப்பதற்காக கூட்டு சந்தைப் படுத்தல் அணுகுமுறையினை கைக்கொள்வதற்கு அரசாங்கம் இணங்கியது.

## 9.13 உள்நாட்டு வர்த்தகமும் நிறுவன ரீதியான ஒழுங்குகளும்

உள்நாட்டு வர்த்தகத் திணைக்களமானது (உ.வ.தி) நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம், விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம், நிறைகள் மற்றும் அளவீடுகள் கட்டளைச் சட்டம் ஆகியவற்றின்கீழ் நுகர்வோருக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கான இதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற் கொண்டது. இத்திணைக்களத்தின் திடீர் சோதனைப் பிரிவு சந்தையில் திடீர் சோதனை களையும், மேற்பார்வைகளையும் மேற்கொள்வ தினூடாக உள்நாட்டு வர்த்தகத்தை ஒழுங்கு படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. நாட்டின் உள்நாட்டு வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தும் முகமாக 1996இல் 1,821 திடீர்ச்சோதனைகளும் 1,485 குற்ற வழக்குத் தொடர்புகளும், 44,960 வர்த்தகப் பரிசோதனைகளும் இத்திணைக்களத் தினால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன. கவனத்திற்கெடுக்கப்பட்ட இக்காலப்பகுதியில் நுகர்வோரின் பிணக்குகளைத் தீர்த்துவைத்தலே உள்நாட்டு வர்த்தகத் திணைக்களத்தின் முக்கிய தொழிற்பாடாகக் காணப்பட்டது. முக்கியமாக குறைந்த தரம் குறைவான விற்பனைக்குப் பிந்திய பணிகள் ஆகியன பற்றிய முறைப்பாடுகள் நுகர்வோருக்கு எதுவித செலவுமின்றி திணைக் களத்தினால் தீர்த்து வைக்கப்பட்டன. அத்துடன் இத்திணைக்களமானது வளமாக்கி வர்த்த கத்திலான ஒழுங்கற்ற நடவடிக்கைகளை இல்லாமற் செய்யும் நோக்குடன் வேளாண்மை அபிவிருத்தி அமைச்சுடனிணைந்து வளமாக்கிச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தொடர்ந்தும் உதவியது. வர்த்தகத்தில் பயன்படுத்தப்பட்ட வழிமுறைகளின் பயன்பாடு மற்றும் கட்டுப் பாடு தொடர்பிலான சட்டவாக்கத்தினை ஒருங்கி ணைக்கவும், கைத்தொழில், நலம், சுற்றாடல், பாதுகாப்பு ஆகிய துறைகளில் சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்க மதிப்பாராய்வுச் சான்றிதழ்களை வழங்குவதற்காக சட்ட வரை யமைப்பினை உருவாக்கவுமென 1995இல் கட்டளைகள் மற்றும் பணிமசோதா நிறைவேற்றப் பட்டது. திணைக்களத்தின் ஆண்டுக்கான சரிபார்க்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிறை மற்றும் அளவுகளின் 1,433,684 பிரிவுகள் பரிசோதிக்கப்பட்டு பாதுகாப்புக்காக முத்திரை யிடப்பட்டன.

பொதுமக்கள் மாணவர்கள் ஆகியோருக்குக் கல்வி டிகட்டும் நோக்குடன் நுகர்வோர் அறிவூட்டல் நிகழ்ச்சிகள், ஆய்வரங்குகள், பொது அறிவுப்போட்டி நிகழ்ச்சிகள் ஆகியன உள்நாட்டு வர்த்தகத் திணைக்களத்தினால் அதன் மாவட்டப் பிரிவுகள் மற்றும் தலைமை அலுவலகங்க ளினூடாக மேற்கொள்ளப்பட்டன.

நியாய வர்த்தக ஆணைக்குழுவானது (நி.வ.ஆ.) தனியுரிமை மற்றும் இணைப்பு மீதான விசாரணைகள் போட்டியற்ற நடைமுறைகள் பற்றிய விசாரணைகள் ஆகியவற்றுடன் தற்போது விலைக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்படும் ஒரேயொரு உற்பத்தியாகிய மருந்தாக்கல் உற்பத்திகளின் ஆகக்கூடிய சில்லறை விலைகளை ஒழுங்குபடுத்தல் ஆகியவற்றில் தன் நடவடிக்கை களை மேற்கொள்ளும் எழுபத்தியேழு இறக்கு

மதியாளர்களினாலும் 7 உள்ளூர் தயாரிப்பாளர்களினாலும் இறக்குமதி செய்யப்பட்ட ஏறக்குறைய 5,000 மருந்தாக்கல் விடயங்களின் விலைகள் இவ்வாணைக்குழுவினால் கட்டுப்படுத்தப்பட்டன. எனினும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட சில அத்தியா வசிய மருந்துகளின் விலைகளின் கட்டுப்பாடு அமைச்சரவை உத்தரவைத் தொடர்ந்து 1996இல் நீக்கப்பட்டது. நியாய வர்த்தக ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் கோழித்தீன் ஒருநாள் கோழிக்குஞ்சுகள் பதப்படுத்தப்பட்ட கோழி, மதுசாரம், குடிவகை ஆகியவற்றின் வழங்கல் தொடர்பிலான தனியுரிமை சக்தி மற்றும் போட்டியற்ற நடைமுறைகள் மீது மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளை நியாய வர்த்தக ஆணைக்குழு விசாரணை செய்த வேளையில் உள்ளூர்ச் சந்தையில் சீன பென்சில்களைப் புகுத்தியமை பற்றிய முறைப்பாடுகளும் பரீட்சிக்கப்பட்டன.

கூட்டுறவு மொத்த விற்பனை (கூ.மொ.வி.நி) தனது முக்கிய உணவுப் பண்டங்களின் இறக்குமதியையும் தனது உணவு விடயங்கள் ஏனைய நுகர்வுப் பொருட்கள் ஆகியவற்றின் மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனைகளையும் தொடர்ந்தும் மேற்கொண்டது. 1995இல் அறிமுகப்படுத்தப்பட்ட தீவடங்கிலுமான அங்கீகாரத் திட்ட மானது 1996இல் 604 புதிய அங்கீகாரம் பெற்ற வணிகர்களை நியமிப்பதன் மூலம் மேலும் விரிவாக்கப்பட்டது. இதன்மூலம் உள்நாட்டு விற்பனைகளை விரிவடையச் செய்ததுடன் 1996இன் இறுதியில் தொழிற்பாட்டிலிருந்த அங்கீகாரம் பெற்ற வணிகர்களின் மொத்த எண்ணிக்கையை 7,927 ஆக்கியது. கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் கொள் வனவு விலைகளைக் குறைக்கவும், விற்பனைகளை விரிவாக்கவுமென ஏனைய தனியார்துறை இறக்குமதியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்வதிலும் பார்க்க தேவைப்பட்டபோது நேரடியாக இறக்குமதி செய்தது. 1996இல் கூ.மொ.வி.யின் நேரடி அரிசி இறக்குமதிகள் மொத்த அரிசி இறக்குமதி அளவின் 11 சதவீதத்திற்கு வகைகூறின. கூ.மொ.வி இன் சிவப்புப் பருப்பு இறக்குமதிகளின் பங்கானது 42 சதவீதத்திலிருந்து 8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததுடன் செத்தல் மிளகாயைப் பொறுத்த வரையில் 1995இற்கும் 1996இற்கும் இடையில் 19 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தனியார் துறையிலிருந்தான அதிகரித்த போட்டியினால் கூ.மொ.வி.யின் பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் சீனி இறக்குமதிகளின் பங்குகள் 1996இல் முறையே 7 சதவீத, 6 சதவீத, 5 சதவீத குறைந்த மட்டங்களைப் பதிவுசெய்தன. கூ.மொ.வி. நிறுவனம் தொடர்ந்தும் கோதுமைத் தானியத்தின் ஏக இறக்குமதியாளராக விளங்கியது. இதே வேளையில் கோதுமை மாவின் விலை மீதான உதவுத்தொகையில் 1996இல் காணப்பட்ட படிப்படியான குறைப்புடன் கிலோகிறாம் ஒன்றுக்கான மொத்த விலையிலும் 1995 திசம்பர் இறுதியின் ரூ. 11.15 இலிருந்து 1996 திசம்பர் இறுதியில் ரூ. 16.15 இற்கான அதிகரிப்பொன்று காணப்பட்டது. இவ்விலை அதிகரிப்பானது உதவித்தொகையை 1995இன் இறுதியின் கிலோகிறாமொன்றுக்கு ரூ. 4.95 இலிந்து 1996இன் இறுதியில் கிலாகிறாமொன்றுக்கு ரூ. 2.55இற்கு குறைவடையச் செய்தது. மீதமுள்ள உதவித்தொகை மூலத்தை முற்றாக நீக்கி, கோதுமை மாவுக்கும் பாணுக்கும் நெகிழ்ச்சித் தன்மையுடைய விலைமுறையை ஏற்படுத்த அனுமதிப்பது முக்கியமானதாகும். தனியார் துறையை கோதுமைத் தானியத்துக்கான இறக்குமதி வர்த்தகத்துக்கு அனுமதிப்பதன் மூலமும் மாவரைக்கும் கம்பனியுடன் நேரடியாக கொடுக்கல் வாங்கலில் ஈடுபட இது இலகுவாக்கப்படலாம். அத்துடன், இறக்குமதி வர்த்தகத்தில் அரச உடைமைத் தொழில் முயற்சியொன்றின் பங்குபற்றுதலானது வர்த்தகச் சூழலில் பெருமளவிலான நிலையற்ற தன்மையினை எடுத்துக் காட்டுவதுடன் இயல்திற முறையில் கூடிய திறனுடைய தனியார் வர்த்தகர்களைச் சேர்த்துக்கொள்ளாது சந்தையின் திறனையும் குறைத்துக் கொண்டது. இதனால், கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தினை மேலும் விரிவாக்க வேண்டியது உகந்ததல்ல.

பண்டக் கொள்வனவுத் திணைக்களத்தின் (ப.கொ.தி) நடவடிக்கைகள் 1996 யூன் 30 இலிருந்து முடிவுக்குக் கொண்டுவரப்பட்டமையின் காரணமாக 1996இன் முதல் அரைப்பகுதிக்கு இவை மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. தட்டை இறப்பரைக் கொள்வனவு செய்தல், நாளாந்த விலைகளை அறிவித்தல், இறப்பர் பதனிடலுக்காக சிறு உடைமை யாளர்களுக்கு இரசாயனங்கள் மற்றும் கருவிகளை வழங்குதல், பங்கீடு செய்தல் போன்ற பணிகளை வழங்குதல் ஆகியவற்றின் மூலம்

இறப்பர் சிறு உடைமையாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதிற் பண்டக் கொள்வனவு திணைக்களம் 1941 இல் நிறுவப்பட்டது. எனினும், இத்திணைக்களத்தின் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக ஒரு காலப்பகுதியில் சுருக்கமடைந்தமைக்கு வர்த்தக தாராளமயமாக்க லின் பின் இறப்பர்ச்சந்தையில் காணப்பட்ட போட்டித் தன்மையுடைய வர்த்தகம், கொள்வனவு மத்திய நிலைய வலையமைப்பின் போதியதற்ற தன்மை, இறப்பர் விலைகளின் மாறுந்தன்மை ஆகியன காரணமாயிருந்தமையினால் பண்டக் கொள்வனவுத் திணைக்களத்துக்கான வரவு செலவுத்திட்ட நிதியங்களின் வழங்கலை 1996 நடுப்பகுதியிலிருந்து நிறுத்துவதற்கென அரசினால் தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டது.

## 9.14 சுற்றுலா

1996 சனவரியில் கொழும்பில் நடந்த குண்டுத் தாக்குதலின் பின்னர் பெரும் பின்னடைவைக் கொண்டிருந்த சுற்றுலாத் துறையானது ஆண்டின் இறுதியில் மெதுவாக மீட்சியடைந்தது. எனினும் சுற்றுலா வருகைகள் 25 சதவீதத்தால் வீழ்ச்சிய டைந்து 1996இல் 302,265 ஆக விளங்கின. இதன்விளைவாக சுற்றுலாக் கைத்தொழிலிலிருந்தான மொத்த வருவாய்கள் 23 சதவீதத்தால் 1995இன் சிஎஉ 1,490 இலட்சத்திலிருந்து வீழ்ச்சியடைந்து (ரூ. 115,690 இலட்சம்) 1996இல் சிஎஉ 1,150 இலட்சமாக (ரூ. 91,950 இலட்சம்) விளங்கின.

சுற்றுலா வருகைகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினால் வெளிநாட்டு விருந்தினர் இரவுகள் 27 சதவீதத்தால் வீழ்ச்சிய டைந்த வேளையில் உணவகங்களில் தங்கும் மொத்த வீதம் 1995இன் 53 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 40 சதவீதமான குறைந்த மட்டத்துக்கு வீழ்ச்சியடைந்தது. பிரதேச அடிப்படையில் கொழும்பு பெரும்பாகம் மற்றும் கொழும்பு புறநகரத்தில் உணவகங்களில் தங்கும் வீதங்கள் முறையே 58 சதவீதம், 55 சதவீதத்திலிருந்து 49 சதவீதத்திற்கும், 45 சத வீதத்திற்கும் வீழ்ச்சியடைந்ததுடன் தென்கரை யோரத்தில் உணவகங்களில் தங்கும்வீதம் 50 சதவீதத்தலிருந்து 35 சதவீதத்துக்கும் வீழ்ச்சி யடைந்த வேளையில் புராதன நகரங்களின் உணவகங்களில் தங்கும் வீதம் 52 சதவீதத்தி லிருந்து 38 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது. எனினும் தங்கும் வீதத்தில் ஏற்பட்ட பெருமளவான வீழ்ச்சியானது 1996இல் உள்ளூர் விருந்தினர் இரவுகளில் ஏற்பட்ட 13 சதவீதம் கொண்ட அதிகரிப்பினால் ஓரளவுக்கு ஈடுசெய்யப்பட்டது.

அட்டவணை **9.12**

சுற்றுலாப் புள்ளி விபரங்கள்

| விடயம் | 1994 | 1995(அ) | 1996(ஆ) | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | 1995 | 1996 |
| 1. சுற்றுலா வருகைகள் | 407,511 | 403,101 | 302,265 | -1.1 | -25.0 |
| 2. சுற்றுலா இரவுகள் ('000) | 4,251 | 3,918 | 3,072 | -7.8 | -21.6 |
| 3. தங்கும் அறை விகிதம் (%) | 56.6 | 52.6 | 40.3 | -7.1 | -23.4 |
| 4. மொத்தச் சுற்றுலாப் பெறுகைகள் (ரூ.ப.இ) | 11,375 | 11,569 | 9,195 | 1.7 | -20.5 |
| 5. தலைக்குரிய சுற்றுலாப் பயணச் செலவு (ரூபா) | 27,913 | 28,700 | 30,420 | 2.8 | 6.0 |
| 6. மொத்தத் தொழில் | | | | | |
| நிலை | 84,154 | 87,360 | 82,828 | 3.8 | -5.2 |
| நேரடி | 35,064 | 36,260 | 33,131 | 3.4 | -8.6 |
| மறைமுக | 49,090 | 51,100 | 49,697 | 4.1 | -2.7 |

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.

மூலங்கள்: சுற்றுலாச்சபை
இலங்கை மத்திய வங்கி

தரமிடப்பட்ட தங்குமிடத் துறையில் உணவகப் பிரிவுகளின் எண்ணிக்கையானது 138 இலிருந்து 143இற்கு அதிகரித்த வேளையில் அறை இயலளவு 1995இன் 11,225இலிருந்து 1996இல் 11,600 இற்கு அதிகரித்தது. அறையொன்றுக்கான படுக்கைகளின் விகிதம் முன்னைய ஆண்டைப்போலவே 1.9 ஆக மாற்றமின்றியிருந்தது. உணவகத்துறையின் அறை இயலளவானது ஆண்டுதோறும் இலகுவாக

**வரைபடம் 9.9**
**சுற்றுலாப்புள்ளி விபரங்கள்**
**(1990=100)**



600,000 சுற்றுலாப் பயணிகளை ஆற்றலுடைய தொழிற்பாடுகளுக்காகத் தங்க வைக்கக் கூடியதாக காணப்பட்ட போதிலும் கைத் தொழிலில் காணப்பட்ட மந்தமான செயலாற்றம் குறைந்த தங்கும் அளவினையும் தொழிலில் தளர்ச்சியினையும் விளைவித்தது. 1996இல் சுற்றுலா வருகைகள் இவ்வியலளவின் அரைப் பங்காக மட்டுமே காணப்பட்டு உணவகப் பொறுப் பாளர்களுக்குக் கடுமையான கஷ்டத்தை ஏற்படுத்தின. தொழிலில் ஏற்பட்ட இழப்பு 1996இல் ஏறக்குறைய 4,500 ஆக மதிப்பிடப் பட்டுள்ளது.

எல்லா முக்கிய பிரதேசங்களிலிருந்துமான சுற்றுலா வருகைகள் முன்னைய ஆண்டைவிட வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன. இலங்கைக்கான சுற்றுலாப் போக்குவரத்தின் முக்கிய மூலமாகத் தொடர்ந்தும் விளங்கி மொத்த வருகைகளில் 55 சதவீதத்துக்கு வகைகூறிய மேற்கு ஐரோப்பா 33 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. இரண்டாவது மிப்பெரும் மூலமாக விளங்கிய ஆசியாவிலிருந்தான வருகைகள் 13 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. அவுத்திரலாசியா, வட அமெரிக்கா, கிழக்கு ஐரோப்பா ஆகிய வற்றிலிருந்தான வருகைகளும் முறையே 15 சதவீதத்தாலும் 14 சதவீதத்தாலும் 1 சத வீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. எனினும் இவ்வனைத்து மூலங்களிலுமிருந்தான வருகைகள் 1996 ஒக்டோபரின் பின் சில முன்னேற்றத்தைக் காட்டின.

சுற்றுலா வருகை தந்தோரில் பெரும் பான்மையாரினது நோக்கம் விடுமுறையாகும். சுற்றுலா வருகை தந்தோரில் 67 சதவீதமானோர் பிரதேசங் களுக்கிடையேயான பறப்புக்களில் வருகைதந்த வேளையில் மற்றொரு 28 சத வீதமானோர் பிரதேசங்களுக்குள்ளேயான பறப்புக்களில் வருகை தந்திருந்தனர். எயர்லங்கா பறப்புக்கள் 1995இல் மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் 27 சதவீதத்தினைக் கொண்டு வந்தமைக்கெதிராக 1996 இல் 28 சத வீதத்தைக் கொண்டிருந்தன.